

# நிழல் தந்து போன....

# நல்ல ஐயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல் தந்து போன....
# நல்ல ஐயா

தொகுப்பு:-

ந. பாக்கியநாதன்
B.A., Dip-in-Edu, SLTS-2-II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title :- Nilal Thanthu Phona Nalla
Iyah

Editor :- Mr.N.Pakkiyanathan (Teacher)
School Lane,
Imayanan, Uduppiddy.

Copy Rigt :- Editor

First Edition :- 19.01.2013

Publisher :- Mr.N.Ragunathan
"Ananthakanam"
Arivalayam,
Imayanan East Uduppiddy.

Printers :- Selva Print
V.V.T, Road,
Navalady, Uduppiddy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயாவின் நினைவுகளுக்கு சமர்ப்பணமாக....

எங்கள் ஐயாவின் வாழ்வின் சுவடுகள் மிக ஆழமாகப் பதிந்தவை. உழைப்பின் உயர்வையும் உரத்தினையும் உணர்ந்தவர் அவர். உண்மையான வாழ்வுக்கு வழிகாட்டியாக நின்றவர். தன் பிள்ளைகள் ஒவ்வொருவரினதும் வாழ்வின் உயர்வுக்காகவும் தன் வாழ்வை அர்ப்பணித்தவர். அவரின் திடீர் மரணம் எம்மை உலுக்கியது ஏதோ உண்மைதான். மரணம் நமது கைகளில் இல்லை. உழைத்துக் கொண்டே உயிர் துறப்பவர்கள் வாழ்வில் உண்மையுடன் இருந்தவர்கள் இந்த வகையில் எம் தந்தையின் இறப்பு உன்னதம் பெறுகின்றது.

எங்கள் தந்தையை எண்ணிப் புலம்பம்படி அவர் எம்மை வைக்கவில்லை. புலம்ப எதுவுமில்லை. புலம்புவதால் அவரின் பெருமை நிலைத்துவிடப் போவதுமில்லை. இதில் நாம் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளோம். இதனாற்றான் இந்த முயற்சி ஐயாவின் நினைவுகளைத் தாங்கிவரும் நினைவேடு நிலைத்த பயனுடையதாகவும் பேணத்தக்கதாகவும் அமையவேண்டும் என விருப்புக்கொண்டோம். இதன் விளைவுதான் நிழல் தந்து போன நல்ல ஐயா என்ற இந்தக் கட்டுரைத் தொகுப்பு.

**தேகவியோகப் பாக்கள் கல்வெட்டுப் பாடல்கள்) எங்கள் பண்பாட்டில் தவிர்த்துவிட முடியாத இலக்கிய வகைதான். அப் பாக்களைப் பாடுபவர்கள் மரபுச்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுளாக்கத்தை நன்கு அறிந்த புலவர்களாகவும், கவிஞர்களாகவும் இருந்தனர். ஒரு காலகட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில பண்டித மரபினர் இத்தகைய பாக்களை எழுத இருந்தனர். இன்று இது அருகிப்போய்விட்டது. எளிமைப்படுத்தபட்டுவிட்டது. அதே நேரத்தில் தேகவியோகப் பாக்களின் தொகுதியை பேணிப் பாதுகாக்கும் மனோபாவமும் மக்களிடம் குறைந்துபோனது. தனிமனிதன் குறித்த புலம்பல்களை உறவுகளுக்கு அப்பால் எத்தனைபேர் பேணுவர்? அப்படி எதிர்பார்ப்பதும் தவறானது. தர்க்கம் அற்றது. இதனாற்றான் கல்வெட்டுக்கள் நினைவுமலர்களாக மாற்றம் பெற்றன. இதன் வழிதான் நல்ல ஐயா என்ற இந்த நினைவேடும் இதில் அடங்கியுள்ள விடயங்களின் செழுமை ஐயாவின் நினைவுகளை தாங்கிநிற்கும் வல்லமையை இந்த நினைவேட்டுக்குத் தந்துள்ளன.

இந்த நூலில் வரும் கட்டுரைகள் மாணவர்களுக்கும், அறிவுத் தேடல் மிக்கவர்களுக்கும் பயனுள்ளதாக அமையவேண்டும் என்பது எங்கள் மனவிருப்பம் அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு கட்டுரைகளைத் தந்த அனைவரையும் நன்றியுடன் மனதிருத்திக் கொள்கின்றோம் இந்த நினைவேட்டின் வெளியீட்டிற்கு ஆலோசனைகள் வழங்கியவர்கள் இதனை அழகுற அச்சேற்றித் தந்த 'செல்வா அச்சகத்தினர்' ஐயாவின் நினைவுகளில் எங்களோடு அருகிருந்தவர்கள் யாவருக்கும் எம் மனமார்ந்த நன்றி.

மகன் ந.பாக்கியநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1) இறப்பு: நம்பிக்கைகளும் சடங்குகளும்
ஒரு சமூகவியல்ப்பார்வை (த.அஜந்தகுமார்) 1 - 18

2) கிராமிய வாழ்வின் பண்பாட்டுச் சூழல்
நிலை பேறும் மாற்றமும் குறித்த சில
சிந்தனைகள் (இ.இராஜேஸ்கண்ணன்) 19 - 26

3) சாவு எனும் சமூக பொருண்மை : மொழியாலான
அகவயம் (ந.மயூரரூபன்) 27 - 38

4) வடமராட்சி பிரதேச பேச்சு மொழி வழக்காறுகள்
(புலோலியூர் வேல் நந்தகுமார்) 39 - 46

5) ஆன்மீகமும் கல்வியும்
(திருமதி ஈ.குட்டித்தம்பி) 47 - 49

6) சமூக வலைத்தளங்களும் அவற்றின்
தாக்கங்களும் (தி.சுபாகரன்) 50 - 56

7) மாணவர் கல்வியில் பெற்றோரின் பங்கு
(கலைப்பரிதி கே.ஆர்.திருத்துவராஜா) 57 - 62

8) தகவல்.. நுட்பம்
(ஆ.வினோதன்) 63 - 66

9) தனியார் கல்வி நிறுவனங்களும் பாடசாலைகளும்
(ந.பாக்கியநாதன்) 67 - 77

10) பாடசாலைகளில் பயிற்று மொழியாக ஆங்கிலத்தின்
மீள் அறிமுகம் (இ.தமிழ்மாறன்) 78 - 88



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்பு: நம்பிக்கைகளும் சடங்குகளும்
## ஒரு சமூகவியல் பார்வை.

த.அஜந்தகுமார்

வா அழகிய இதமான இறப்பே
அமைதியாக வருகின்ற.... மிருதுவான இறப்பே
மென் பாதங்களுடன் அருகில்
எப்போதும் மிதந்திடும் கரிய தாயே
வலிமையான மீட்போனே நெருங்கிவா

-வால்ட்விட்மன்-

இன்றைய தமிழரின் சடங்குகள் நீண்டபடி மலர்ச்சியைக் கடந்து வந்ததாகும். தமிழரின் தொன்மம், நம்பிக்கை என்பன சடங்கின் வாயிலாகவே வெளிப்படுத்தப்படுகின்றன. இந்தச் சடங்குகளின் விழைவுகளும் முடிவுகளும் அறிவியல் நோக்குடன் அணுகுவோருக்குப் பகுத்தறிவுக்கு உட்படாதவையாக இருக்கலாம். இந்தச் சடங்குகளின் நம்பிக்கைகளும், தொன்மங்களும் பண்பாட்டின் வேர்களாகும். பண்பாடு ஆழ்மனப்பட்டது ஆகும். புறக்குறியீடுகளின் வாயிலாகவே ஆழ் மனப் பொருண்மைகளை அறிய முடியும் இந்தச் சடங்குகளில் இடம்பெறும் குறியீடுகள் மிகவும் வினைத்திறன் கொண்டவை, சமூக வாழ்வில் வீரியம் மிக்கவை, தமிழர் சமூக பண்பாட்டுப் பொருண்மைகளை உயிர்ப்புகளுடன் வலியுறுத்துபவை.

வாழ்க்கை வட்டச் சடங்குகள் அனைத்தும் வாழ்வைப் பல தொடர்நிலைகளாகப் பகுத்து ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை அறிமுகப்படுத்தும் பணியைச் செய்கின்றன ஒவ்வொரு சடங்கும் சமூக வாழ்வின் பொறுப்புகளையும், நடத்தை முறைகளையும் மக்களின் உலகப்பார்வையையும் அவை குறித்த பண்பாட்டின் கருத்தமைவுகளைச் சமூகமயப்படுத்தவும், பண்பாட்டு மயப்படுத்தவும் அவர்களை ஒரு பண்பாட்டு நபராக்கும் பணியையும் செய்கின்றன.

தொன்மமும் அதன் பொருண்மைகளை வெளிப்படுத்தும் நம்பிக்கைகளும் சடங்கு நிகழ்த்துதலில் பின்பற்றப்படும் நடைமுறையை நிர்ணயிக்கின்றன. என்பதோடு தொன்மையும் சடங்கும் ஒன்றையொன்று சார்ந்து காணப்படுகின்றன. என்பதே நாம் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சமாகும். இந்தச் சடங்குகள் சமூக, பொருளாதார பண்பாட்டு, சமய அரசியல், அர்ப்பணிப்பு, கலை, அழகியல் தளங்களைச் சார்ந்து தம்மை பொருண்மை ரீதியில் அகலிப்புச் செய்கின்றன. சடங்கின் தன்மைகளுள் முதன்மையான கூறு எதுவென்றால் சிந்தனை வடிவத்தில் மட்டும் நிலை நிறுத்தப்படாமல் செயலில் நிகழ்த்தப்படுவதாகும். இருந்த போதும் சடங்கின் செயல் தன்மையானது சிந்தனை வடிவின் பின்புலத்தோடு வெளிப்படுவது நிகழ்த்தப்படுவது என்பது பரவலாக ஏற்கப்பட்ட கருத்தாகும்.

மேற்சுட்டி வந்த கருத்தாக்கங்கள் வழியே இறப்பு என்ற சடங்கு தொடர்பாக தமிழரிடையே வழங்கி வரும் நம்பிக்கைகளைச் சமூகவியல் பின்புலத்தில் உசாவுவதே எனது ஆய்வு நோக்காகும்.

இறப்பு என்பது உடலை விட்டு உயிர் நீங்கும் நிலையாகும் இது இயல்பானதாயோ அகாலமானதாகவோ நிகழலாம். "நோதலும் சாதலும் புதுவதன்றே" என்று கணியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்குன்றனார் பாடியமை இறப்பின் நிச்சயத்தை உறுதியாக்குகிறது.

இறப்பு என்பதற்குத் திவாகரம்

துஞ்சல் பொன்றல் விளிதல் வீசுதல்
முஞ்சல் துவன்றல் முடிவு உலத்தல் வீடல்
மாய்தல் இறத்தல் மாளல் தபுதல்

சாதலென்ன சாற்றினர் புலவர் என்று இறப்புப் பற்றிய பொருட்சார்பில் சிந்தனைத்தளத்தில் அதில் கூறப்பட்டுள்ளது. இங்கு இறத்தல் என்பது கடத்தல் என்ற அடிப்படையில் பயணமாகவும், மாய்தல் மறைதல் என்ற பாங்கில் காட்சியிலிருந்து தற்காலிகமாக மறையும் கதிர், மதி போன்றன போலும் (பிறப்புச்சுழற்சி இங்கு எதிர்பார்க்கப்படுகிறது) சாதல், மங்குதல், குன்றுதல் என்ற பான்மையில் நிலைத்து நிற்காத நறுமணம், எரிந்து உருகும் மெழுகுவர்த்தி, விளக்கொளி போன்றும் வீதல், வீடல், வாடுதல் என்பதில் காலத்தில் வாடும் மலர் போன்று முடிவு, துவன்றல், உலத்தல், தபுதல் போன்றவற்றால் உலர்ந்த/பட்டமரம் அல்லது வேரற்றுச் சாய்ந்த.்.வெட்டப்பட்ட மரம் போன்றும் இறப்புப் பற்றிய சிந்தனையை திவாகரம் சுட்ட முனைந்திருக்கிறது. இறப்பு பற்றிய சிந்தனைகள் மக்களிடையே -சமுதாயங்களிடையே வேறுபடுதல் காரணமாக இறப்பைக் குறிக்கும் சொல்/பொருட்களும் அதற்கேற்ப வேறுபட்டுச்செல்வது தவிர்க்க முடியாததே.

இறப்பு ஒரு முடிந்த முடிவு என்று கருதுவோர் தரும் குறிப்பு, படிமம் அல்லது குறியீடு வேறாகவும், மறுமையை - மறு உலக வாழ்வை நோக்கிய கருத்தினர் தரும் சிந்தனைகள் வேறாகவும், மரணம் கொண்டாடப்பட வேண்டிய ஒன்று என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைப் புலம் வேறாகவும் அமைகிறது. இதனை நோக்குவோம்.

இறப்பு ஒரு முடிந்த முடிவாகச் சிலர் கருதுகின்றனர். இதனை மகாகவி பாரதியாரின்,

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாம் என்றே எண்ணி இரப்பார்
பித்தமனிதர் அவர் சொல்லும் சாத்திரம்
பேயுரை என்றிங் கோதடா சங்கம் என்ற வரிகளில்

இருக்கும் எதிர்வினைச் சொல்லாடலில் இருந்து உணரலாம். மேலும் நவீன கவிஞர் நகுலனின் இருப்பதற்கென்று வருகிறோம் / இல்லாமல் போகிறோம் என்ற தத்துவ வரிகள் மூலமும் உணரலாம்.

இறப்புக்குறித்த மறுமை வாழ்வு குறித்த கருத்தினர் தரும் செய்திகளே தமிழ்நிலைப்பட்ட இறப்புச் சடங்கோடு இறுகப் பிணைந்தவை. மறுமை நம்பிக்கையை ஈழத்துக் கவிஞர் மஹாகவியின்,

அன்று பிறந்து இன்று இறப்பதுள்
ஆயதன்று நம் மானுட வாழ்வு காண்!
அப்பனே மகனாகி உயிர் ஓய்தல் அற்று
உயர்வு ஒன்றினை நாடலே உண்மை என்ற வரிகள்

மூலம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

மரணம் திறந்த மனத்துடன் ஏற்கப்படவேண்டிய ஒன்று என்றும் கொண்டாப் படவேண்டிய ஒன்று என்ற எண்ணம் பின் நவீனத்துவ சிந்தனைகளின் கால்கள் தமிழில் பாவ முன்னரே வேரூன்றியுள்ளதை அவதானிக்கலாம் சாவு நிகழ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக்கட்டமான சுடுகாட்டிற்குச் செல்லும் போது பாடைக்கு முன் ஆட்டம், பாட்டு பறைமேளம், வானவேடிக்கை ஆகிய அனைத்தும் ஒரு நிலையில் பார்த்தால் சோகம், களிப்பு என்ற இணைவு நிலையைச் சுட்டுகின்றன. எனினும் இறப்பின் அழகியலானது சோகத்தைத் தாண்டி நிற்கிறது. இந்நிலையிலேயே பின்நவீனத்துவச் சிந்தனைகள் மரணத்தைக் கொண்டாடுகின்றன சம்பத்தின் மிக முக்கியமான நாவலான 'இடைவெளியில்' வரும்.

எந்த நிமிடமும் நீ சாகலாம் என்பதால்
நீ இன்னும் சாகாமல் இருப்பதால் சாவு
உனக்களித்த கருணைதானே அது எனவே
சாவு என்பது வாழ்வுக்குக் கருணா சமுத்திரம் என்ற வரியையும் இருக்கத்து நிலையோடு இணைத்தே பார்க்க வேண்டும்.

சமயச்சார்பு காரணமாகவும், காலவேறுபாடு, பண்பாட்டு வளர்ச்சி அல்லது மாற்றம் காரணமாகவும் மேற்குறித்த சிந்தனை வேறுபாடுகள் நிகழ்ந்திருக்கலாம். மக்களின் இறப்புப் பற்றியும் சிந்தனையையும் அவற்றுக்கு மூலாதாரமான நதிமூலமும் ரிஷி மூலமுமான நம்பிக்கைகளையும் இறப்பின் பின்நிலை பற்றிய கோட்பாடுகளையும் தமிழர் நிலையில் இருந்து இன்னும் இன்னும் பன்மைப்பாட்டுடன் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும். சமூகவியல் சார்ந்த இந்தச் சிந்தனைகளின் ஆய்வுப்புலமே நமக்குத் தேவைப்படுகிறது.

இறப்பு தொடர்பாகத் தமிழரிடையே வழங்கி வரும் நம்பிக்கைகளை அறிவதற்கான ஆய்வுப் பாதையைப் பின்வருமாறு இனங்காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இறப்பு நிகழ்வதற்கு முன் உள்ள நம்பிக்கைகள்.
2. இறப்பு நிகழ்ந்தவுடன் சடங்குகளுடன் பிணைந்த நம்பிக்கைகள்.
3. இறப்பின் பின்நிலை பற்றிய நம்பிக்கைகள்.

முதலில் இறப்பு நிகழ்வதற்கு முன்னான தீய உற்பாதங்கள் குறித்த நம்பிக்கைகளையும் அவற்றின் சமூகவியல் பின்புலத்தையும் ஆராய்வோம்.

இலக்கியங்கள் பலவற்றிலே இறப்பொன்று நடப்பதற்கு முன் சில தீய உற்பாதங்கள் நிகழ்ந்ததாகக் காட்டப்படும் (உ-ம் கோப்பெருந்தேவி கனவு - சிலப்பதிகாரம்) கனவில் பல தீய உற்பாதங்கள் காட்டப்படும் அவை எவை என நோக்குவோம்.

☞ எருமை வருதல் - கனவிலே எருமை வருவதானது அறப்பை/இறப்பொன்று நிகழப்போகிறது என்பதனையே சுட்டி நிற்பதாக தமிழர் நம்பிக்கை விளங்குகிறது. இதற்குரிய பின்புலத்தைப் பார்ப்போமாக இருந்தால், இயமனின் வாகனமாக எருமை விளங்குவதாக நம்பப்படுகிறது. இதனை,

**எருமை யோடிருந்தோட்டி யெள்ளீயுங் காளை (பரிபாடல் 8.86) எருமைக் கரும்பரி யூர்வோன் (சிலப்பதிகாரம்) என்ற இலக்கிய ஆதாரங்கள் மூலம் நிறுவப்படுகிறது. பசு தொடர்ந்து கத்துவதும் துர்க்குறியாகவே கருதப்படுகிறது. எருமையின் வாசம் உணர்ந்ததும் அவ்வாறு கத்துகிறது என நம்பலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ கறுத்த, பெரிய தோற்றம் உள்ளவர்கள் கனவில் வருதல் வீட்டில் களவு போவது போல் கனவில் வருதல்.

இயமனின் தோற்றம் கறுத்த, பெரிய தோற்றமாகவே சமூக சிந்தனையில் உறைந்தமையும், ஒரு திருட்டைப் போலவே உயிரும் தெரியாமலே களவாடப்படுவதாலும் இந்த நம்பிக்கைகள் தோன்றி இருக்கலாம்.

☞ திருமணம் நடைபெறுவது போல் கனவு வருதல்

கனவு x நனவு என்ற சமூக எதிரிநிலை உளவியலே இந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது. அதாவது மங்கலம் - அமங்கலம், அமங்கலம்- மங்கலம் என்ற கனவுக் கருதுகோளே இந்தநம்பிக்கையின் ஆதாரமாகும்.

இவ்வாறான கனவுசார்ந்த நம்பிக்கைகளைத் தவிர இன்னும் பல நம்பிக்கைகளும் காணப்படுகின்றன.

☞ நோயாளியைக் கொண்டு செல்கையில் விறகு வாகனம் வருதல்.

இந்நம்பிக்கைக்கு காரணம் தகனக்கிரியைக்கு அவசியமானது விறகாகும். விறகுக்கான தேவை முன்னுக்கு வந்துவிட்டது என்ன தோற்றுதலையை இது விளக்குகிறது என்ற சிந்தனையால் இந்நம்பிக்கை தோன்றியது.

☞ முருங்கை முறிதல்

இயமனின் வருகை அசுரப்பிரவேசம் போன்றது என்பதாலும் அந்த வருகையின் அறிவிப்பாகவும் இது நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ அதிக விளைச்சல் - நெல் போன்றன அதிகமாக விளைத்தால் சா விளைச்சல் என்று துர்க்குறியாகக் கொள்வர்.

☞ நாய் ஊளையிடுதல், ஆந்தை அலறுதல், கலவாய் கத்துதல், சுடலைக்குருவி கத்துதல், நடுச்சாமத்தில் கோழி கூவுதல்

இவை அருவநிலைகளை மோப்பத்தின் மூலம் உணர்ந்து இறப்பின் வரவை இயம வருகையை அறிவிக்கின்றன. நாயின் மோப்பசக்தி அறிவியல் யுகத்திலும் பயன்படுவதை இதனுடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.

☞ வானில் இருந்து விண்மீன் விழல்

மன்னனின் நாட்டில் விண்மீன் நிலைப்பதற்காகவும் பகையரசர்களின் நாடுகளில் விண்மீன் வீழவும் புலவர்கள் பாடி வைத்ததன் மூலம் விண்மீன் விழுவது என்பது மரணம் நிகழப்போகிறது தொடர்பான துர்க்குறியே என்பதனை உணரமுடிகின்றது. எஸ் ராமகிருஷ்ணனின் நெடுங்குருதி நாவலிலும் இதுசார் பதிகை ஒன்றை அவதானிக்க முடிந்தது இரவில் எமது கண்ணுக்குத் தெரியும் விண்மீன்கள் எல்லாம் எமது உறவுகளே என்றும் ஒரு விண்மீன் விழுவதும் ஒரு பிரிவு நிகழ்தலுக்கான முன்னறிவிப்பு என்றும் கருதப்படுகிறது. டி.எஸ்எலியட்டும் மங்கும் நட்சத்திரத்தை இறப்பாகவே கருதுகின்றார்.

☞ தலையில் பல்லி விழுதல்

தலையில் பல்லி விழுவதால் பெருமரணம் சம்பவிக்கும் என்று நமது பஞ்சாங்கங்கள் ஒன்றுபட்டுச் சொல்கின்றன தலைக்கு ஆபத்து என்ற மரபுத் தொடரின் ஐதீகத்தின் நீட்சியாகவே அதைக் கருத முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ தெளிவு ஊற்றுதல், திருப்பு பாடுதல்
தாகசாந்தி செய்வித்து நிம்மதியாகப் பயணிக்கவைக்கவே தெளிவு ஊற்றப்படுகிறது. உயிர்போகாது அந்தரிக்கும் சிலருக்கு அவர்களுக்கு விருப்பமான மண்ணைக் கரைத்து ஊற்றுவர். இவ்வாறே உயிரின் சாந்தி நிலைக்காகத் தேவாரம் திருவாசகம் பாடி போகும் உயிரைப் புனிதப்படுத்தல் நிகழ்ந்தது.

அடுத்து இறப்பு நிகழ்ந்தது முதல் இறுதிக்கிரியைகள் செய்யும் வரைக்கும் நிகழ்த்தப்படும் சடங்குகளையும் அவற்றின் நம்பிக்கைகளையும் சமூகவியல் பின்புலம் கொண்டு ஆராய்வு செய்ய முயல்கிறேன்.

☞ இறந்தவரைத் தெற்குப்பக்கமாகத் தலை இருக்குமாறு படுத்துதல் தெற்குத்திசையானது உயிரெடுத்த இயமன் திசை என்பதாலேயே இவ்வாறு செய்யப்படுகிறது.

☞ தலைமாட்டில் மங்கள விளக்கு/குத்துவிளக்கு ஏற்றிவைக்கப்படும் இறப்பு மனித உடலைத் தெய்வமாக்குகிறது. இறந்த உடல் புனித உடலாகிறது இதனால்தான் இறப்பு நிகழ்ந்ததும் மங்கள விளக்கேற்றப்படுகிறது. மேலும் உயிரானது ஜோதியுள் கலந்து ஜோதிமயமாகிவிட்டது என்றும் கொள்ளலாம் சம்பந்தர், நந்தனார்(?) ஜோதியுள்ள கலந்ததை இணைத்துப்பார்க்க வேண்டும்.

☞ பிணத்திற்கு அருகில் உப்பு, நீர் என்பனவும் வைக்கப்படும் இறுதியாக, இறந்தவர் உண்ட உணவில் உப்புக்குறைவு இருந்தால் அதை நிவர்த்திக்கவும், தெளிவு ஊற்ற முன்னர் உயிர்பிரிந்திருந்தால் தாகத்தை ஈடு செய்யவுமே இவை வைக்கப்படுகிறது. மேலும் உடலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருமவிடாமல் தடுப்பதற்கும் உப்பும் நீரும் உதவுவதாகவும் கருதப்படுகிறது.

☞ இரண்டு கைப்பெருவிரல்களும், இரண்டு காலப்பெருவிரல்களும் சேர்த்துக் கட்டப்படும் கிரியைகள் நிகழ்த்தும் வரை ஆன்மா வேறு எங்கும் போகாது கட்டி வைப்பதாகவும் உடல் குறண்டாமல் கூனாமல் இருப்பதற்காகவும் இது செய்யப்படுகிறது. இதனாலேயே இறுதிக்கிரியையின் போது சுடலையில் கட்டுகள் அவிழ்க்கப்படுகிறது.

☞ பிணம் இருக்கும் இடத்திற்கு நேரே - மேலே எச்சந்தூங்கி என்னும் வெள்ளச் சீலை கட்டப்படும் இது ஆன்மாவானது புனித/தூய நிலையைச் சென்றடைந்ததை சுட்டுகிறது பிணத்தையும் வெள்ளைத்துணியாலேயே மூடுவர்.

இறப்பு என்பது சவம் சிவமாகியது என்ற நம்பிக்கையைக் கொண்டு விளங்குவதாகும். சவம் சிவமாவதற்கே சடங்காசாரங்கள் முன்னெடுக்கப்படுவதைக் காணலாம்.

பிள்ளையார் கும்பம், நவகும்பம், கொள்ளியம்பல கும்பம் என்று மூன்று கும்பங்கள் வைக்கப்படும் நவன கும்பத்தைச் சிவமாகப் பாவித்து தர்ப்பை வைத்துச் செய்யப்படும். சிவம் என்ற நிலையில் வைத்தே ஆன்மாவுக்குப் பூசை செய்யப்படுகிறது. ஆணவம், கன்மம், மாயை நீக்கும் பொருட்டு நவகும்ப பூசை செய்யப்படுகிறது.

வாழ்வு, சாவு இரண்டுக்குமான சடங்குக் குறியியல் மண உறவின் பொருண்மையையும் மையப்படுத்துவதை அவதானிக்க முடிகிறது. வாழ்வுச்சடங்குகள் ஈரியல் உறவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மன-மன) குறியீடாக விளங்க இறப்புச் சடங்கு பிரிதல் சார்ந்த ஓரியல் உறவைக் குறியீடாக்குகிறது. இந்தச் சமூகவியல் பின்புலத்தில் பின்வருவன நிகழ்தப்படுகிறது.

☞ மணவறையில் வண்ணந் தீட்டப்பட்டுப் பானையானது மஞ்சள் நீரால் நிறைந்திருக்கும். ஆனால் இறப்புச் சடங்கில் வண்ணம் பூசாத ஒற்றைப் பானையில் இருந்து மூன்று ஓட்டைகள் போட்டு சாதாரணமான நீர் வெளியேற்றப்படுகிறது. இது ஓரியல் தன்மையையும் எதிர்நிலையையும் சொல்லுகின்றது. மேலும் நீரானது உயிர் - ஆற்றல் - புனிதமடைந்ததையும் சொல்கிறது.

☞ திருமணத்தில் வாழ்த்தும் போது அறுகரிசி போடப்படுவதையும் இறப்புச் சடங்கில் வாய்க்கரிசி போடப்படுவதையும் இணைத்துப் பார்க்க வேண்டும். இவ்வளவு நாளும் ஒன்றாக உண்டு - களித்து பிரியும் தறுவாயில் வாய்க்குக் கொடுத்து மனதை சாந்தி செய்யும் முயற்சியும் இதில் நடக்கிறது.

☞ திருமண நிகழ்வில் மணமகன் - மணமகள் வலமிருந்து இடம் சுற்றி வருவது மங்களத் தன்மையைப் பிரதிபலிப்பதாகும் சுடலையில் எரிக்க/ புதைக்க முன் இடமிருந்து வலம் சுற்றுவது அமங்களத்தையும் வாழ்வு - சாவு இரண்டுக்குமான எதிரியல் தாக்கத்தைச் சுட்டுக்கின்றது.

☞ தனிவாழையை முன்னுக்குக் கட்டுவதன் மூலம் ஈரியல் தன்மை கொண்ட வாழ்வானது இறப்பின் மூலம் தனி மரமாவதைச் சுட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ சுடலைக்குப் பிணம் வெளிக்கிடுகையில் ஒற்றைச் சுளகை முறித்துப் போடுதல் சுடலை செல்லுகையில் பாடைக்குப் பின்னால் வெற்றிலையை ஒற்றையாகப் போடுதல், ஒற்றை வரிசையில் குளிப்பாட்டும் இடத்தில் பந்தல் கால் அமைத்தல் (மூன்று கால்) என்பனவும் இந்த ஓரியல் தன்மையைச் சுட்டும் நிகழ்தல்களே ஆகும்.

அடுத்து இன்றைய தமிழ்ச் சமூதாயத்தைப் பொறுத்தவரை அதன் சடங்குகளின் பொருண்மையானது வேளாண்மை வாழ்வை மையமாகக் கொண்டது. வாழ்வானாலும் சாவானாலும் பெரும் பான்மையான சடங்குகளில் தாவரங்களும் தாவரப்பொருட்களும் குறியீடாக்கப்படுகின்றன. இந்தச் சமூகப்பின்புலத்தில் சிலநம்பிக்கைகள் சடங்குகளாக உள்ளன.

☞ இறப்புச் சடங்கின் போது தென்னம்பிள்ளை நடுதல் உயிர் மீண்டும் பிறக்கும் என்ற நம்பிக்கை இதனோடு இணைந்தது.

☞ இளநீரினாலே குளிப்பாட்டுவது - பிணத்துக்கான குளிர்மைத் தன்மைக்காகவும், சிவத்திற்கான புனித நீராட்டல் என்பதற்காகவும் இவ்வாறு செய்யப்படுகிறது.

☞ தோராணம் கட்டுவது - மாவிலை கட்டுவது

☞ நீரினால் குளிப்பாட்டுவது(குடமுழுக்கு, மஞ்சள் தண்ணீர்) புனிதநிலையை அடையச் செய்வதற்கான முன்னாயத்தமாகவே இது நடக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ கொள்ளிக்குடத்தை ஓலை உறியில் கட்டல் இயற்கையோடு மனிதன் எவ்வாறு பிணைந்துள்ளான் என்பதை இறுதிக்கிரியைக்கான கொள்ளிக்குடத்தை தாங்கும் உறுயே சுட்டி நிற்கிறது (அதன் உருவநிலையிலும்)

☞ இறுதிக்கிரியையில் அக்கினிக்கு இரையாக்குவதும் நிலத்தின் கீழ் புதைப்பதுவும் இயற்கையின் பிரதிநிதி மீண்டும் இயற்கைக்குள் போகிறான், கலந்து கொள்கிறான் என்பதையே சொல்லுகின்றது அத்தோடு புதைத்தல் என்பது மண்ணுக்குள் விதைப்பது போன்றதாக்கும் விதை முளைப்பது போன்று இறந்தவர் மறு உயிர் பெறுவார் என்ற நம்பிக்கை காணப்படுகிறது.

மேலும் முழுமைபெற்ற, முழுமை பெறாத வாழ்வுக்கான கருத்தூக்கம் இறப்புச் சடங்கிலும் படிநிலைத் தன்மையின் குறியீட்டைத் தாங்கி நிற்கிறது திருமணமாகி இறந்தோர்க்கு கருமாதி என்னும் சடங்கு நிகழ்வும் திருமணமாகாமல் இறந்தோர்க்கு புண்ணிய தானம் என்னும் சடங்கு நிகழ்வும் நடத்தப்படுகிறது.

முன்னது விரிவாகவும், பின்னது எளிமையாகவும் செய்யப்படுகிறது.

☞ சுண்ணம் இடித்தல்-

சுண்ணக் கிரியையில் பிறந்தது முதல் இறக்கும் வரையும் செய்த செயல், தொழில்களை வாழ்த்தி ஆன்மாவுக்கு நிறைவினை அளிப்பதாகும். சுண்ணாம்பு, அறுகு, மஞ்சள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன இடித்து பிணத்தின், நெற்றியில் பொட்டுவைப்பது பிணத்தை முக்கண்ணனாக்கி சிவமாக்கற் பொருட்டே.

☞ பிணத்தின் காலில் பூணூலை வைத்து வணங்குதல் இனி அவரைச் சந்திக்க முடியாது என்பதனால் அவருக்க அர்ப்பணம் செய்து அழுது விடைகொடுக்கும் மரபு.

☞ இறந்தவர் விரும்பி உபயோகித்த கண்ணாடி, குடை கைப்பிரம்பு, போன்ற ஞாபகப் பொருட்களையும் பிரதேப் பெட்டியுள் சேர்த்து வைக்கப்படும். ஏனெனில் இவற்றைப் பார்க்கும் தோறும் இறந்தவரின் ஞாபகங்கள் உக்கிரம் கொள்ளும், இதை மனதளவில் தடுப்பதற்கான சிறு முயற்சியே இது மனுஷ்ய புத்திரனின் இறந்தவனின் ஆடைகள் என்ற அற்புதமான கவிதை இந்த நினைவின் உக்கிரத்தை பதிவு செய்துள்ளது. அத்தோடு இறந்தவர் மீண்டும் ஆவியாக ஞாபகப் பொருட்களைத்தேடி அலையாமல் இருப்பதற்காகவும் கொள்ளலாம்.

☞ பஞ்சமித் திதியில் இறந்தால் வேறு ஒருவரையும் கூட்டிக்கொண்டு போகாமல் தடுப்பதற்காகக் கோழிக்குஞ்சை பிரேதப் பெட்டியுள் வைத்து அனுப்பப்படும்.

☞ சுடலை செல்லும் வரைக்கும் நெற்பொரி தூவப்படும் இறந்தவர் ஆவியாக இரவிலே வராது தடுப்பதற்கு ஆகும். இரவில் இந்த நெற்பொரிகளை பொறுக்கிக் கொண்டு வருவதற்கிடையில் விடிந்துவிடும் என்பதால் ஆவி திரும்ப ஓடிவிடும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது.

☞ பறை மேளம் அடித்தல் -
இறப்புச் செய்தியையும், இறுதிக்கிரியை நேரம் நெருங்கிவிட்டது என்பதை அறிவிக்கிறது. இவ்வாறாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூர்ணோத்தும், தகனம் வரை பல நம்பிக்கைகளை சமூக இணைவுடன் தரிசிக்க முடிகிறது.

அடுத்து இறுதிக்கிரியைகள் நிகழ்ந்தன பின்னர் நிலவிவரும் நம்பிக்கைகளை சமூகவியல் பின்புலத்தில் நோக்குகின்றேன்.

இறுதிக்கிரியைகள் நிகழ்ந்ததன் பின்னர் இறந்தவரின் உலகு எங்கே எப்படி அமைகிறது என்பது தொடர்பான நம்பிக்கைகள் தமிழர் மத்தியில் நிலவுவதைக் காணலாம் இதை நோக்குவோம்,

☞ கடல்/நீருக்கு கீழ் அமைகிறது என்பது தொடர்பான நம்பிக்கைகள் இருக்கிறது. இதனாலேதான் 31ம் நாள் கடலில் சென்று கல்லுப்போடும் நிகழ்வு நடக்கிறது (சாம்பல், எலும்பு) அத்தோடு ஆறுகள் என்பவை நவக்கிரகங்களைப் போல காலச் சுழற்சியை ஆறுகள் குறியீடாக்குகின்றன. ஜீவ ஓட்டம் என்பது கால ஓட்டத்தொடு ஒப்பிடக் கூடிய ஓர் உருவகக் குறியீடாகும்.

☞ மேலுலகத்தில் அமைகிறது.

குடந்தை தனித்தெழியப் புட்புறந்தற்றே

(குறள் 338)

விசும்பின் வலவனேவா வானவூர்தி (புறம் 27)

என்ற இலக்கிய ஆதாரங்கள் மேலுலக நம்பிக்கையைச் சான்றுப்படுத்துகின்றன.

அடுத்து காடாற்றும் நாளன்று இறப்பு நிகழ்ந்த வீட்டிலே சுவையற்ற உணவு தயாரிக்கப்பட்டு அதனைச் சுடலையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடை பரவப்படும் சில இடங்களில் தண்ணீரிலே வேகவைத்த உப்புச்சேராத சுவையற்ற மாவினால் மடைவைக்கப்பட்டன இது உயிரானது ஒடுக்க நிலையை அடைந்தமையை மறையாகச் சுட்டுகின்றது காடாற்று என்பது பிணத்தை எரித்த தீயை ஆற்றுவதாகும். இங்கு தீ ஒரு புனிதச்சடங்கை நிறைவேற்றிய ஒன்றாகக் கருதப்படுகின்றது. தீயை ஆற்ற முதலில் பால் தெளிக்கப்பட்டு பின்னரே தண்ணீரும் இளநீரும் ஊற்றப்படும் இதனாலேயே இது பால்தெளிசடங்கு என்றும் சொல்லப்படும்.

இறந்தவரது கடைசிப் படுக்கையமைந்த இடத்திலே அவருக்கென முதலிலே மடைபரவிய பின்னரே ஏனையோருக்கு சாப்பாடு பரிமாறுவதானது அவருக்கு மரியாதையளிப்பதாகும்.

வீட்டிலே பெரியோர் சாப்பிட்ட பின்னரே சாப்பிடும் வழக்காற்றின் தொடர்ச்சியே இதுவாகும், இவ்வாறே திவசம் நடக்கும் வரை வருகின்ற பண்டிகைகளும் முதல்நாள் பலகாரம் படைத்து அழும்வழக்கம் காணப்படுகிறது. இதேபோலவே பனங்கிழங்கு கிண்டி அவித்த பின்னர், ஒடியல் புட்டு முதன்முதலில் அவித்த பின்னர் 'பேய்க்குப் படைக்கும்' வாழக்காறும் காணப்படுகிறது இதற்குரிய சமூகக் காரணம், அவர்கள் வைத்த பனைகளின் பயனை, மரங்களின் பயனை அவர்களுக்கு அர்ப்பணம் செய்து நன்றி தெரிவிப்பதாகும்.

எட்டாம் நாள் நிகழ்வு செலவு, கழிவு, சடங்கு என அழைக்கப்படும் எட்டுநாள் செல்லுதல், எட்டுநாள் கழிதல் என்ற பொருளிலேயே இவ்வாறு அழைக்கப்படுகின்றது. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளின் பின்னரே இறப்பு நடைபெற்ற வீடு வழமை நிலையில் இயங்கத் தொடங்குகிறது முந்திய ஒழுங்கை நிலைநாட்ட சில நாட்கள் தேவைப்படும் இந்த நிலைமாற்ற நிகழ்வே இறப்பு நிலையில் துடக்கு நடை முறையென தமிழரிடையே புழங்கியது திருமந்திரத்தின் ஒரு பாடல் ஒன்றும் இந்த நிலைமாற்ற நிகழ்வை அழகாகச் சொல்கின்றது இதனாலேயே முதல் ஏழு நாள்களும் உறவினர்களாலே உணவு வழங்கப்படுகின்றது. சில இடங்களிலே 31 நாள் வரைக்கும் உணவு வழங்கப்படுகிறது.

இறப்பு நிகழ்ந்த எட்டாம் நாள் படையல் செய்வதற்கு இன்னொரு நம்பிக்கையும் காரணமாகின்றது. அதை நோக்குவோம்.

இறந்தவர் பேய் நிலையிலே எட்டாம் நாள் வரை வீட்டிலே இருப்பதாக நம்பியே இது செய்யப்படுகின்றது. தீட்டுடைய பெண் ஏழாம் நாளின் பின்னரே கருத்தரிப்பாள் அவ்வாறே இறந்தவரும் 7 நாள் பேய் நிலையில் இருந்து 8ம் நாள் புதிய கருநிலையை அடைவார் இதனாலேயே சில இடங்களில் இறந்தவரின் பெயரே பேரப்பிள்ளைக்குச் சூட்டப்படுகின்றது. மேலும் பெயரன் என்பதே பேரன் என்று மருவியது. கருநிலை பெறாத பேய்கள் மனிதரை வருத்தி அலைந்து திரியும் என நம்பியே எட்டாம் நாளில் படைக்கப்படும் எட்டுப்படையல்களில் ஒன்றைக் கொண்டு போய் சந்தியில் போடும் வழக்காறு காணப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ம் நாள் அந்தியேஷ்டிக்கிரியைகள் புனிதத்தைச் சுட்டுகின்றன இதனாலேயே கிரியைகள் முடிந்து தீட்டுகள் எல்லாம் அகற்றிய பின்னரே பிராமண ஐயர் வருகை தருகிறார் அந்தியேஷ்டிக் கிரியையின் போது 1 வருடத்துக்குப் போதுமான ஏகதட்டுச் சாமான்கள் வழங்கப்படுகின்றன.

இதற்குக் காரணம் ஆண்மாவானது நீண்ட நெடும் பயணத்தில் ஈடுபடவுள்ளது என்பதால் படுத்து உறங்க பாய், தலையணை என்பனவும், தாகமெடுத்தால் தண்ணீருக்கு செம்பு, வெயில், மழைக்கு குடையும், வெக்கைக்காலத்திற்கு விசிறியும், கரடு முரடான இடங்களைத் தாண்ட வேண்டும் என்பதால் செருப்பும் வழங்கப்படுகிறது.

அத்தோடு உண்பதற்கு அரிசி, காய்கறிகள் என்பனவும் வழங்கப்படுகிறது. இதற்காகவே திவசம் நடத்தப்படுகிறது. மீளவும் 1 வருடச் சாமான்களை கையளிக்கும் நிகழ்வு திவசம் மூலம் தொடர்கிறது.

இவ்வாறாக தமிழரிடையே இறப்புத்தொடர்பாகப் பல்வேறு நம்பிக்கைகள் நிலவுவதையும் அவற்றின் சமூகவியல் பின்புலத்தையும் அவதானிக்க முடிகிறது இச்சடங்கு, தொன்மை, நம்பிக்கை சார்ந்த பொருண்மைகளே தமிழரின் பன்மைத்துவ அடையாளங்களாக நீண்டு நிலைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமிய வாழ்வின் பண்பாட்டுச் சூழல்
## - நிலைபேறும் மாற்றமும் குறித்த சில சிந்தனைகள் -

**இ. இராஜேஷ்கண்ணன்**

இன்றைய உலகமயமாக்கற் சூழலில் உலகமே ஒரு கிராமம் என்று பொதுநிலைக் கருத்து ஒன்று எல்லோராலும் ஏற்கப்பட்டு விட்டது. இந்த நிலையிலும் சமூகங்களை கிராமிய சமுதாயம், நகரமய சமுதாயம் என்று வகைப்படுத்திப் பார்க்கும் நிலையும் உள்ளது. அதேநேரத்தில் கிராமங்கள் தமக்கேயான இயல்புகளை இழந்துவருவதும் கவனிக்கத்தக்கது. இதனாற்றான் கிராமிய வாழ்வு வழக்கொழிந்து போவது தொடர்பான கூடிய அக்கறை ஏற்பட்டுள்ளது. சாதாரண மக்கள் தொடக்கம் ஆய்வாளர்கள் வரை சமூகத்தின் சகல தளத்தினரும் மறைந்து போன, போய்க்கொண்டிருக்கின்ற வாழ்வியலின் மரபுகளை மீள நினைந்து இன்புறவும் ஆவணங்களாக பதிவாக்கவும், பேணவும் அக்கறை கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் பழையவற்றைப் பேணுதல் மற்றும் ஆவணமாக்குதல் தொடர்பாக முனைபவர்கள் கிராமிய சமூக உருவாக்கத்தின் பின்னணியிலுள்ள காரணிகள் குறித்துத் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் கிராமிய வாழ்வின் எச்ச சொச்சங்களும் நின்று நிலைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலான பணிகளையும் தற்காப்புக்களையும் செய்யமுடியும். அவற்றிலும் குறிப்பாக கிராமிய வாழ்வின் பண்பாட்டுச் சூழலைப் பாதுகாத்தல் என்பது இன்று பாரிய சவால்களுக்கு முகம் கொடுப்பதால் அதுகுறித்து இங்கு அதிக கவனமெடுக்கப்படுகின்றது.

கிராமிய வாழ்வு என்பது என்ன? என்ற வினாவுக்கு விடையளித்தல் சிக்கலானது. ஆயினும், கிராமிய சமூகத்தின் உறவுமுறை பற்றிய ஒரு முறைப்படுத்தப்பட்ட அறிவுதான் கிராமிய வாழ்வின் சமூகவியல் என்ற விளக்கத்தின் அடிப்படையில், கிராமிய வாழ்வு என்பது கிராம சமுதாயத்தின் உறவுமுறையினாற்றான் தீர்மானமாகின்றது என்ற முடிவுக்கு வரமுடியும். ஒரு கிராமமானது தனது கட்டமைப்பு பௌதீகமான இயல்புகள், சமூக இயக்க முறை போன்ற பல்வேறு விடயங்களில் பன்னெடுங்காலமாக பல மாறுதல்களைப் பெற்று வந்த போதிலும் இன்றுவரை கிராமியப் பண்பு மாறாதிருப்பதற்கான அடிப்படையினை இந்த உறவுமுறை தான் தருகின்றது இதுவே கிராமிய வாழ்வாகி உயிர்ப்புடன் நிலைக்கின்றது.

கிராமிய சமூக உருவாக்கத்தைத் தீர்மானிக்கும் காரணிகளில் பின்வரும் மூன்று சூழல்கள் மிக முதன்மையானவை.

1. புவிசார் சூழல்
2. சமூகம் சார் சூழல்
3. பண்பாடுசார் சூழல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் புவிசார் சூழல் என்பது கிராமத்தின் அமைவிடம், காலநிலை, இயற்கை வளங்கள், நிலத்தின் பண்புகள் போன்ற விடயங்களைக் குறிக்கின்றது. சமூகம்சார் சூழல் என்பது சமூக வேறுபாடுகள், சமூக ஏற்றத்தாழ்வும் அடுக்கமைப்புக்களும், குடியகல்வுகள், சமூக அமைவியக்கம் என்பவற்றைக் குறிக்கின்றது. பண்பாடுசார் சூழல் என்பது பண்பாட்டு வெளிப்பாடுகளின் எளிமை, சமூகக்கட்டுப்பாடுகள், கிராமிய அறிவு மற்றும் திறன்கள் வாழ்வின் தரங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாகும். மேற்கண்ட மூன்று காரணிகளிலும் கிராமிய வாழ்வினை அடையாளப் படுத்துவதில் அதிக செல்வாக்குள்ள காரணியாக பண்பாடுசார் சூழல் அமைகின்றது. ஏனைய இரண்டு காரணிகளில் ஏற்படும் குழப்பநிலைகளால் உருவாகும் விவகாரங்களைக் காட்டிலும் பண்பாடுசார் காரணிகளிலான குழப்பநிலையால் உருவாகும் விவகாரங்கள் அதிகளவில் கிராமிய வாழ்வைப் பாதிக்கின்றன. இதனால் பண்பாடுசார் காரணிகள் குறித்து சற்று விரிவாக நோக்க வேண்டும்.

பண்பாடுசார் சூழல் சமூகம்சார் சூழலிலிருந்து சற்று வேறுபட்டாவது தனிமனிதர்களின் ஆளுமை விருத்தி மற்றும் தனிமனிதனது சமூக மயமாக்கலிலும் பண்பாடுசார் சூழலின் செல்வாக்கு அதிகம். கிராமிய மனிதர்கள் இதனாற்றான் பண்பாடுசார் சூழலில் வரும் இடர்பாடுகளால் அதிகம் பதட்டத்துக்கு உள்ளாகின்றனர்.

பண்பாடுசார் சூழலில் அடங்கும் பண்பாட்டு வெளிப்பாடுகளின் எளிமைத்தன்மை என்பது அந்த மக்களின் விவசாயம், இயற்கையுடன் இணைந்த வாழ்வுடன் தொடர்புடைய சூழலைக் கருதுகின்றது. கிராமத்தவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் வெளிப்பாடுகளான கொண்டாட்டங்கள், திருவிழாக்கள், நாட்டார் பாடல்கள் மற்றும் நாட்டார் கதைகள் யாவும் அவற்றுடன் தொடர்புடையன. கிராமத்தவர்களின் கொண்டாட்ட வெளிப்பாடுகளான குழல் இசைத்தல், நடனமாடுதல், இரவு முழுவதும் மது அருந்துதல் என்பனவும் இத்தகைய வெளிப்பாடுகள் தான். இவற்றை நாட்டார். இலக்கியங்கள் தான். வெகுவாக வெளிப்படுத்துகின்றன.

பண்பாடுசார் சூழலில் அடங்கும் சமூகக் கட்டுப்பாடுகள் என்பது கிராமிய சமுதாயங்களில் முறைசாராத வகையில் வழங்கிவரும் கட்டுப்பாடுகளைக் கருதுகின்றது. கிராமிய மனிதர்கள் இத்தகைய கட்டுப்பாடுகளிலிருந்தும் விலகுகின்றபோது அயலவர்களின் குறைகூறும் கதைகளுக்கு (அரட்டை) உட்படுகின்றனர். இத்தகைய கட்டுப்பாடுகளை தமக்குத் தாமே சுயமாக ஏற்படுத்திக் கொள்கின்றனர். கிராமியத் தலைவர் ஒருவருக்குக்கட்டுப்படுதல், கிராமியத் தெய்வங்களுக்கும் பயந்து வாழ்வை ஒழுங்கு படுத்துதல், கிராமிய நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மரபுவழி ஒழுக்கங்களைப் பேணுதல் போன்றன யாவும் இந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும். இவை யாவற்றுக்கும் மேலாக மனிதர்களிடையே ஒருவரைப்பற்றி இன்னொருவர் முற்றாக அறிந்து பழகும் நிலை இந்தச் சமூகக் கட்டுப்பாட்டின் மிகவும் அடிப்படையான ஒரு அம்சமாக அமைந்து விடுகின்றது.

பண்பாடுசார் சூழலின் அடுத்த விடயமாக கிராமிய அறிவு மற்றும் திறன்கள் அடங்குகின்றன. இது கிராமியத்தின் மிகவும் அடிப்படையான பலம். பயிர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதிலான பாரம்பரியமான நுட்பங்கள், மண் தொடர்பான அறிவு, மரபுவழி நீர்ப்பாசன நுட்பங்கள், பயிர்களின் தன்மையும் அவற்றைப் பராமரிக்கும் உத்திமுறைகளும், கிராம மனிதர்களின் கைவினை ஆற்றல்கள், கிராமிய கலைஞர்களின் படைப்பாக்க ஆற்றல்கள் போன்ற பல்வேறு அறிவு மற்றும் திறன்கள் கிராமியத்துக்கென தனியானவை.

வாழ்வின் தரங்கள் என்பது ஒரு பண்பாடுசார் சூழலில் ஒரு வித்தியாசமான எண்ணக்கரு எல்லோருக்கும் இதனை வாழ்க்கைத் தரம் என்பது கருதிவிடும் தவறான புரிதல் உள்ளது. ஆனால், அப்படியல்ல பொதுவாக கிராமத்து வாழ்வில் வறுமை அதிகம் இருக்கும் ஆனால், அதனை மகிழ்வாக அனுவிப்பது அவர்களின் வாழ்வாகி விடுகின்றது. பல புதிய கருவிகள் பொருட்கள் வந்துவிட்ட போதிலும் பழைய கருவிகள் மற்றும் புழங்கு பொருட்களை உபயோகிப்பதில் மகிழ்ச்சி கொள்கின்றனர். அலுமினியப் பாத்திரங்களால் அவர்கள் பெறும் மகிழ்வைவிட மட்பாண்டங்களால் அதிகம் மகிழ்வார்கள். அதனைத் தரநிலையில் உயர்ந்ததாகக் கருதுவார்கள்.

கிராமிய பண்பாடுசார் சூழலின் இந்த நான்கு வகையான அம்சங்களும்தான் கிராமிய வாழ்வினை இறுதிவரை பிரதிபலித்து நிற்பவை. ஆனால், இன்று இவற்றின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் புறவிசைகள் ஏராளம். இவற்றின் மீத விழும் அடிகள் பெரும்பாலும் திட்டமிடப்பட்டவையாக அமைவதால் கீழைத்தேசக் கிராமிய வாழ்வின் தனித்துவங்கள் அலுக்குலைய தொடங்கிவிட்டன. உலகம் ஒரு கிராமம் என்று பேசுபவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க தனித்தனியான கிராமங்களுக்கான அடையாளங்களைக் கண்டுகொள்ள மறுப்பவர்களாகின்றனர்.

கிராமிய வாழ்வின் பண்பாடுசார் சூழல் எதிர்கொள்ளும் சவால்கள் எவை? என்பது குறித்த அறிவுத் தெளிவு ஏற்படும் போதுதான் அவற்றை அவற்றுக்குரிய அடையாளங்களுடன் பேணுவதற்கான உபாயங்கள் குறித்துச் சிந்தித்துச் செயற்பட முடியும்.

கிராமிய வாழ்வின் பண்பாடுசார் சூழலிலான சவால்கள் மேற்கண்ட அதன் நான்கு கூறுகளுக்கும் தனித்தனியானவை. அவை விரிவாக ஆராயப்பட வேண்டியவை. இங்கு விரிவஞ்சி மிகச் சுருக்கமாக நோக்கப்படுகின்றது. நாட்டார் வழக்காறுகள் சந்ததிகளுக்கிடையே கடத்தப்பட/ பரிமாற்றப்பட போதுமான ஏற்பாடுகள் கிராமியச் சூழலில் இல்லை. இன்றைய தொழிநுட்ப விஞ்ஞான விருத்தியை நாட்டார் மரபுகளின் வளர்ச்சிக்கு ஏற்றவகையில் பயன்படுத்திக் கொள்வதிலான தயக்க நிலை உள்ளது.

நாட்டார் வழக்காறுகள் பயில் நெறிகளாக மாற்றம் பெறுவதிலான வேகம் குறைவதுடன் அவ்வாறான பயில்வுகள் கிராமிய சூழலுக்கு அப்பால் நிகழ்வது பொருத்தமற்றதாகின்றது. நாட்டார் மரபுகளில் வல்லுனர்களாக இருப்பவர்களை அவர்களுக்குரிய பெறுமானத்துடன் பேணுவதிலான தயக்கநிலை உள்ளது. கிராமிய வாழ்வில் நகர வாழ்வுக் கூறுகளின் அபரிதமான ஊடுருவலும் குடியகல்வுகளின் வழியான அனுபவ விரிவாக்கமும் வாழ்வின் தரங் குறித்த பதட்டங்களை கிராமிய மனிதர்களிடையே ஏற்படுத்தியுள்ளது. கிராமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் மரபு வழிபாட்டுக் கூறுகளும் வழக்காறுகளும் சமஸ்கிருத மயமாக்கப்பட்டு அல்லது நவீனத்துவப் படுத்தப்பட்டு அவற்றுக்கேயுரிய தனித்துவப் பெறுமானங்களை இழந்துவிடுகின்றன. கிராமியப் பண்பாட்டுச் சூழலுக்கான அறிவும் திறன்களும் கபளீகரம் செய்யப்பட்ட புதிய வடிவில் தோன்றிய இடத்திலேயே சந்தைப்படுத்தப்படுகின்றன.

விஞ்ஞானப் புரட்சி என்ற பெயரில் ஏற்பட்டுள்ள வேகம் உற்பத்தி அல்லது விளைவின் அளவைக் கருத்திலெடுக்கின்றதே தவிர அதன் தரத்தையோ நிலைபேற்றுத் தன்மையினையோ கருதுவதில்லை.

இதனால் கிராமிய அறிவு மற்றும் திறன் என்பன பிள்ளைப் பேற்றுக்குப் பத்தியம் பார்ப்பதில் கூட இன்று அதிகம் நம்பப்படுவதில்லை. கிராமிய மனிதர்களின் வாழ்க்கைத் தரம் என்பது இன்று பெரு நகரங்களில் வாழும் மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கணிப்பிடும் சுட்டிகளால் தான் பார்க்கப்படுகின்றன. உலகில் மனிதர்களும், அவர்களின் சமூக, பண்பாட்டு நிலைகளும் அடிப்படையான பல வேறுபாடுகளைக் கொண்டிருக்கும் போது வாழ்கைத் தரத்தினைக் கணிப்பிடும் குறிகாட்டிகள் மட்டும் எப்படி ஒரே மாதிரியானவையாக அமைய முடியும்? இவை குறித்து ஆழமாக சிந்திக்கும் போதான் கிராமியப் பண்பாடுசார் சூழலைப் பேணுவதற்கான அடிப்படை உணர்வூக்கமும் அதற்கான உபாயங்களும் கண்டறியப்படும். இது விரைவு படுத்தப்பட வேண்டிய ஒரு முக்கியமான முயற்சியாக எம்முன் கிடக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவாக, கிராமிய அடையாளத்தை அப்படியே பேணுவதனால் வாழ்வில் மேம்பாடு ஏற்பட்டு விடுமா? புதிய மாற்றங்களை அனுசரிப்பதில் என்ன தவறு? மாற்றங்களும் அவற்றின் பரவுகையும் தவிர்க்க முடியாதவை அல்லவா? போன்ற வினாக்களும் உள்ளன.

உண்மையில் பண்பாடு என்பது ஒரு தேங்கி நிற்கும் குட்டை அல்ல. அது ஒரு நீரோட்டம் தான். எங்கோ ஒரு மலையில் உற்பவித்த நீரோட்டம் தனக்கு இயைந்த வழிகளால் ஓடி வளைந்து நெளிந்து ஒரு பொதுவான சமுத்திரத்தில் சேரும் மார்க்கத்தினைத் தானே வகுத்துக்கொள்கின்றது.

சமுத்திரம் போன்ற உலகப் பண்பாட்டும் பன்மைத்துவத்தில் தனித்தனிக் கிராமியப் பண்பாடுகள் கலப்பதில் எந்தத் தவறுமில்லை. அது இயல்பானதுதான். ஆனால் நீரோட்டம் உற்பவித்த இடமும் அது ஓடிவந்த வழிகளும், காவிச் சென்ற நீரின் குணங்களும் இழக்கப்பட்டுவிட்டால் என்ன பயன்? நிரோட்டத்தின் வழியே புதிய கால்வாய்கள் வெட்டப்படலாம் நீர்த்தேக்கம் அமைந்து தேவைக்குப் பயன்படுத்தலாம்.

இவை காலம் எமக்கிட்ட கட்டளைகள். அவ்வாறே புதிய நுட்பங்கள், கருவி கரணங்கள் வரும்போது கிராமியப் பண்பாடுசார் சூழலை புதிய வடிவில் நிலைபெறச் செய்வதற்காக அவற்றை தந்திரோபாயமாகப் பயன்படுத்தும் அறிவுத் தெளிவைப் பெறவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவு எனும் சமூகப் பொருண்மை: மொழியாலான அகவயம்

ந.மயூரரூபன்

இலக்கியம் ஒரு மன உணர்வு. மன உணர்வுகள் நிலைத்த ஒரு வடிவமல்ல. அதன் போக்கில் இலக்கியமும் அதன் மரபான இடத்தில் இருந்து நகரவேண்டும். அப்படிச் செல்லும் இடத்தை தத்துவமும் இலக்கியமும் மிக நெருங்கும் இடம் என்கிறார். தெரிதா தத்துவமும் இலக்கியமும் சிறைப்பட்ட இடங்களிலிருந்து விடுபட்டு அசையும் வெளி இது தான்.

இந்த வெளியின் ஒரு துண்டுதான் இக்கட்டுரையில் என்னால் பேசப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட ஈழத்துக் கவிஞர்களின் சில கவிதைகள் சாவு- சாவைப் பேசும் சொற்கள் என்பதை மையப்படுத்தியதாக இது அமையும்.

மனிதனின் குறி அவனது மொழிதான். உலகிலுள்ள எல்லாப் பொருட்களும் நிகழ்வுகளின் குறியே என்கிறார் சசூர். எடுத்துக்காட்டாக பொலீஸ் உடை அதிகாரத்தின் குறியாகவும் பச்சை நிறத்தின் குறியாக வாகனங்கள் போகமுடியும் என்பதும் உணர்த்தப்படுவதை கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சொல் குறிப்பிடும் அர்த்தம் எவ்வாறானது எனப்பார்க்க வேண்டும். ஒரு பொருளை ஒரு சொல் அப்படியே பிரதிபலிக்கிறதா என்ற கேள்வி உருவாகிறது. சசூரின் பதில் இல்லை என்பது.

உண்மையில் பொருள் பற்றிய சிந்தனையே சொல்லாக அமைகிறது. பொருளை அறியும் போது அப்பொருள் பற்றிய படிமங்கள் எமக்குள் தோன்றுகின்றன. அந்தப் படிமங்களின் கருத்துருவத்தை சொல் தருகிறது. கவிதைகளிலும் மரணம், சாவு குறித்த சொற்கள் அது தருகிற படிமம் கவனத்திற்குரியது. இங்கு எழுதுபவனினதும் வாசிப்பவனதும் அகவய நிலை(Subject) மற்றும் நனவிலி மனம் (Interpersonal Psyehe) என்பன மொழியை சொல்லை உருவாக்குவதில் பிரதான பாத்திரங்களை வகிக்கின்றன.

சமூகத்தையும் தனியனையும் (Society & Individnal) இணைக்கின்ற ஒரு வடிவம் இங்கு தேவைப்படுகிறது. தனியனிடமுள்ள மொழி ஒழுங்குபடுத்தப்பட முடியாததாக குழப்பமுடையதாக அமைந்திருக்கும். அது ஒரு சமூகப் பொருண்மையாக, பிறருக்கு உணர்த்துவதற்காக ஒழுங்கபடுத்தப்பட்ட வடிவத்தை அடைகிறது. அதுதான் மொழிக்கிடக்கு (Langnal) இது தனியனையும் தாண்டிய பொது மொழி சமூகம், சாதி, இனம், மதம், குடும்பம் கட்டமைத்த மொழி.

இங்கு மனிதனின் மொழி மூலம் அகவய நிலை உருவாக்கப்படுகிறது. ஒரு மனிதனின் அகவய நிலை என்பது மொழியாலான அகவய நிலையாக மாற்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகிறது. இதே போல் ஒரு தனியனிடம் உள்ள சமூகம் குறித்த இருப்புக் குறித்த பிரக்ஞை என்பது மொழியின் குறிகளால் உருவாக்கப்பட்டதே.

ஒரு தனியனின் நனவிலி மனமானது அவனது சமூகத்தால் கட்டமைக்கப்பட்டது. குற்றல்- வலி - துன்பம் - பெருங்காயம், தொல் மனப் படிமமாய் (Achaic image) மனித குலம் முழுவதும் கலந்தே இருக்கும். இவ்வாறான ஒரு முற்புரிதல் இங்கு தேவைப்படுகிறது.

''குழந்தைகள் பாதாளச் சிறையுள்
விறைத்துக் கிடக்க
குழந்தைகளின் பறவைகள்
தீ மணலில் வீழ்ந்து புரண்டன
அவர்களின் மூளையைத் தின்றபடி

உட்கார்ந்திருக்கிறது நொண்டி நாய்.
..............................

............................
கால பைரவன் தலையற்ற பொம்மைகளை
எண்ணிக் கொண்டிருக்கிறான் தனக்குள்''
(காலபைரவன், தானா விஷ்ணு)

''நடந்து செல்லும் வயல் வரம்புகளில்
படுத்திருக்கும் பாம்புகள் போல்
வீதிகளின் வெளியெங்கும்
பதுங்கியிருக்கிறது மரணம்''
(ஒரு மரணம் சகுனம் பார்க்கிறது, துவாரகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துடிக்கும் மரக்கிளையில்
காற்றை விலக்கி
அமரும் குருவிகள்
யாதறிந்தன
இந்த மரணப்பொழுதைப்பற்றியும்
விடைபெற்ற பயணி குறித்தும்?
(கருணையில்லாத பிணம், கருணாகரன்)

"பிடி சாம்பலாவது கொடு
என் பிதிர்களின் மடியில்
கொட்டி விடுகிறேன் அவனை

நாளை என்னைத் தீயிடவும்
பிண்டமிட்டு பாதையிடவும்
இல்லை யாரும் ஆயினும்
அவன் போய் உறங்கட்டும் நிம்மதியின்
பேராற்றில்"

(தாயுரை 03, பா. அகிலன்)

ஒரு படைப்பாளியின் நனவிலி மனம் என்பது அவனது அகவய நிலையில் கட்டமைந்தது என்பதை மேலே பார்த்த நான்கு படைப்பாளிகளினூடும் காணமுடியும்.

இங்கு தானா விஷ்ணுவின் நனவிலி மனது பொம்மை என்ற சொல்லை உருவாக்கி வைத்துள்ளது ஊனமுற்ற நாய் (திக்கு நொண்டி நாய்) இவரது கவிதைகளில் கொடூரமான பாத்திரமாக உருப்பெற்றிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோல் துவாரகனின் கவிதைகளில் இயற்கை உயிர்களின் சொற்கள் பரவியுள்ளன பாம்பும் மரணமும் ஒரே தளத்தில் பார்க்கும் அகம் இவருடையது.

கருணாகரனின் அகவயத்தின் 'பயணி' என்ற சொல் நனவிலி மனத்தில் உறைந்துள்ளது. இவரது கவிதைகளிலும் மரணத்தைப் பேசும் இக்கவிதையிலும் மூன்றாமிடத்தில் நின்று பார்ப்பவராகவே இவரது சொற்கள் அமைந்துள்ளன.

தொன்மத்தின் உட்கிடக்கைகளைக் கொண்டு நிறைந்தார் பா.அகிலனின் நனவிலி மனம் செயற்படுகிறது. ஒரு தனியனின் நனவிலி மனம் அவன் வாழும் சமூகத்தால் கட்டமைக்கப்பட்டது என்பதற்கு பா.அகிலனின் தொல்மனப்படிமம் பொருத்தமான எடுத்துக்காட்டு. இங்கு இந்து மத சடங்கார்த்த வலி பேசப்படுகிறது.

'மொழிக்கிடங்கு' என்பது இவர்களுக்குள் இயங்கி கவிதையை வாசிப்பவர்களுடன் எப்படி தொடர்பு படுத்துகிறது என்பதை நாம் பார்க்க முடியும்.

(அ) குழந்தை - நாய் - பொம்மை என இணையும் மொழி வடிவத்தை கையாளும் தானா விஷ்ணுவும்.

(ஆ) வயல் - பாம்பு - வீதி - பதுங்கும் மரணம் என துவாரகனும்.

(இ) மரக்கிளைக்குருவி - மரணப்பொழுது - பயணி என கருணாகரனும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) பிடிசாம்பர் - பிதிரர்- பிண்டம் - நிம்மதிப் போராறு என பா. அகிலனும் தங்களது உணர்வுகளை சமூகப் பொருண்மையாக்கும் மொழிக்கிடங்கினை கையாள்கிறார்கள்.

இங்கு (அ) இல் பொம்மை என்ற சொல் அதற்கான எப்பொருளை தருகிறது என்பது கவிதை தருகின்ற படிமந்த ரூபமாகவே பார்க்க வேண்டும். பொம்மை - குழந்தை தொடர்பு நிலை என்ன என்பதுவும் வாசிப்புக் கருத்துருவமாக அமையும் ஒன்று

இதே போல் தான் எல்லாப் படைப்புகளிலும் சொற்கள் தரும் படிமங்கள் அது இணையும் சொற்களின் அமைப்பு சார்ந்தே வடிவம் கொள்ளும்

சில பொதுக் குறிகளையும் அடையாளங் காணமுடியும், கால- பைரவன், பாம்பு, பிதிர்களின் மடி என்பன நிகழ்வுகளின் குறியாக அமைந்துள்ளன.

உண்மையில் கவிதையை இவ்வாறு துண்டுப்படுத்திப் பார்ப்பது என்பது பொருத்தமற்ற விடயம். என்னும் ஒரு தனியனின் ஆழ்மனச் சேகரத்தில் வாசிப்பிற்கான சாத்தியங்களை எமது சமூகம் சொற்களாய்த் தந்துள்ளது என்பதை அறியும் நினைவு கொள்ளும் வாய்ப்பே இது.

படைப்பு சொற்களாலானது சொற்களுக்குள் அணைத்திருக்கும் சொற்கள் எமக்குள்ளே தான் இருக்கின்றன. அது பொருந்திக் கொள்ளும் அகத்தையும் நனவலி மனதையும் வாசிப்பதே புதுமையானது. வாசிப்பு கவிதையாகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் ஒரு மன உண்ர்வு. மன உணர்வுகள் நிலைத்த ஒரு வடிவமல்ல. அதன் போக்கில் இலக்கியமும் அதன் மரபான இடத்தில் இருந்து நகரவேண்டும். அப்படிச் செல்லும் இடத்தை தத்துவமும் இலக்கியமும் மிக நெருக்கம் இடம் என்கிறார். தத்துவமும் இலக்கியமும் சிறைப்பட்ட இடங்களிலிருந்து விடுபட்டு அசையும் வெளி இது தான்.

இந்த வெளியின் ஒரு துண்டுதான் இக்கட்டுரையில் என்னால் பேசப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட ஈழத்துச் கவிஞர்களின் சில கவிதைகள் சாவு- சாவைப் பேசும் சொற்கள் என்பதை மையப்படுத்தியதாக இது அமையும்.

மனிதனின் குறி அவனது மொழிதான். உலகிலுள்ள எல்லாப் பொருட்களும் நிகழ்வுகளின் குறியே என்கிறார் சுசூர். எடுத்துக்காட்டாக பொலீஸ் உடை அதிகாரத்தின் குறியாகவும் பச்சை நிறத்தின் குறியாக வாகனங்கள் போகமுடியும் என்பதும் உணர்த்தப்படுவதை கூறலாம்.

ஒரு சொல் குறிப்பிடும் அர்த்தம் எவ்வாறானது எனப்பார்க்கவேண்டும். ஒரு பொருளை ஒரு சொல் அப்படியே பிரதிபலிக்கிறதா என்ற கேள்வி உருவாகிறது. சசூரின் பதில் இல்லை என்பது.

உண்மையில் பொருள் பற்றிய சிந்தனையே சொல்லாக அமைகிறது. பொருளை அறியும் போது அப்பொருள் பற்றிய படிமங்கள் எமக்குள் தோன்றுகின்றன. அந்தப் படிமங்களின் கருத்துருவத்தை சொல் தருகிறது. கவிதைகளிலும் மரணம், சாவு குறித்த சொற்கள் அது தருகிற படிமம் கவனத்திற்குரியது. இங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுபவனினதும் வாசிப்பவனதும் அகவல நிலை(Subject) மற்றும் நனவலி மனம் (Interpersonal Psyehe) என்பன மொழியை சொல்லை உருவாக்குவதிழல் பிரதான பாத்திரங்களை வகிக்கின்றன.

சமூகத்தையும் தனியனையும் (Society & Individnal) இணைக்கின்ற ஒரு வடிவம் இங்கு தேவைப்படுகிறது. தனியனிடமுள்ள மொழி ஒழுங்குபடுத்தப்பட முடியாததாக குழப்பமுடையதாக அமைந்திருக்கும். அது ஒரு சமூகப் பொருண்மையாக, பிறருக்கு உணர்த்துவதற்காக ஒழுங்கபடுத்தப்பட்ட வடிவத்தை அடைகிறது. அதுதான் மொழிக்கிடக்கு (Langnal) இது தனியனையும் தாண்டிய பொது மொழி சமூகம், சாதி, இனம், மதம், குடும்பம் கட்டமைத்த மொழி.

இங்கு மனிதனின் மொழி மூலம் அகவய நிலை உருவாக்கப்படுகிறது. ஒரு மனிதனின் அகவயநிலை என்பது மொழியாலான அகவயநிலை யாக மாற்றம் பெறுகிறது. இதே போல் ஒரு தனியனிடம் உள்ள சமூகம் குறித்த இருப்புக் குறித்த பிரக்ஞை என்பது மொழியின் குறிகளால் உருவாக்கப்பட்டதே.

ஒரு தனியனின் நனவிலி மனமானது அவனது சமூகத்தால் கட்டமைக்கப்பட்டது. குற்றல்- வலி - துன்பம் - பெருங்காயம், தொல் மனப் படிமமாய் (Achaic image) மனித குலம் முழுவதும் கலந்தே இருக்கும். இவ்வாறான ஒரு முற்புரிதல் இங்கு தேவைப்படுகிறது.

''குழந்தைகள் பாதாளச் சிறையுள்
விறைத்துக் கிடக்க
குழந்தைகளின் பறவைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ மணலில் வீழ்ந்து புரண்டன
அவர்களின் மூளையைத் தின்றபடி

உட்கார்ந்திருக்கிறது நொண்டி நாய்.

...............................

............................

கால பைரவன் தலையற்ற பொம்மைகளை
எண்ணிக் கொண்டிருக்கிறான் தனக்குள்"

(காலபைரவன், தானா விஷ்ணு)

''நடந்து செல்லும் வயல் வரம்புகளில்
படுத்திருக்கும் பாம்புகள் போல்
வீதிகளின் வெளியெங்கும்
பதுங்கியிருக்கிறது மரணம்"

(ஒரு மரணம் சகுனம் பார்க்கிறது, துவாரகன்)

''துடிக்கும் மரக்கிளையில்
காற்றை விலக்கி
அமரும் குருவிகள்
யாதறிந்தன
இந்த மரணப்பொழுதைப்பற்றியும்
விடைபெற்ற பயணி குறித்தும்?

(கருணையில்லாத பிணம், கருணாகரன்)

''பிடி சாம்பலாவது கொடு
என் பிதிர்களின் மடியில்
கொட்டி விடுகிறேன் அவனை

நாளை என்னைத் தீயிடவும்
பிண்டமிட்டு பாதையிடவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையாரும் ஆயினும்
அவன் போய் உறங்கட்டும் நிம்மதியின் பேராற்றில்"

(தாயுரை 03, பா. அகிலன்)

ஒரு படைப்பாளியின் நனவலி மனம் என்பது அவனது அகயவய நிலையில் கட்டமைந்தது என்பதை மேலே பார்த்த நான்கு படைப்பாளிகளினூடும் காணமுடியும்.

இங்கு தானா விஷ்ணுவின் நனவலி மனது பொம்மை என்ற சொல்லை உருவாக்கிவைத்துள்ளது ஊனமுற்ற நாய் (திக்கு நொண்டி நாய்) இவரது கவிதைகளில் கொடூரமான பாத்திரமாக உருப்பெற்றிருக்கிறது.

இதேபோல் துவாரகனின் கவிதைகளில் இயற்கை உயிர்களின் சொற்கள் பரவியுள்ளன பாம்பும் மரணமும் ஒரே தளத்தில் பார்க்கும் அகம் இவருடையது.

கருணாகரனின் அகவயத்தின் 'பயணி' என்ற சொல் நனவலி மனத்தில் உறைந்துள்ளது. இவரது கவிதைகளிலும் மரணத்தைப் பேசும் இக்கவிதையிலும் மூன்றாமிடத்தில் நின்று பார்ப்பவராகவே இவரது சொற்கள் அமைந்துள்ளன.

தொன்மத்தின் உட்கிடக்கைகளைக் கொண்டு நிறைந்தார் பா. அகிலனின் நனவலி மனம் செயற்படுகிறது. ஒரு தனியனின் நனவலி மனம் அவன் வாழும் சமூகத்தால் கட்டமைக்கப்பட்டது என்பதற்கு பா. அகிலனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்மனப்படிமம் பொருத்தமான எடுத்துக்காட்டு. இங்கு இந்து மத சடந்தார்த்த வலி பேசப்படுகிறது.

'மொழிக்கிடங்கு' என்பது இவர்களுக்குள் இயங்கி கவிதையை வாசிப்பவர்களுடன் எப்படி தொடர்புபடுத்துகிறது என்பதை நாம் பார்க்க முடியும்.

(அ) குழந்தை - நாய் - பொம்மை என இணையும் மொழி வடிவத்தை கையாளும் தானா விஷ்ணுவும்

(ஆ) வயல் - பாம்பு - வீதி - பதுங்கும் மரணம் என துவாரகனும்

(இ) மரக்கிளைக்குருவி - மரணப்பொழுது - பயணி என கருணாகரனும்

(ஈ) பிடிசாம்பர் - பிதிரர்- பிண்டம்- நிம்மதிப் போராறு என பா. அகிலனும் தங்களது உணர்வுகளை சமூகப் பொருண்மையாக்கும் மொழிக்கிடங்கினை கையாள்கிறார்கள்.

இங்கு (அ) இல் பொம்மை என்ற சொல் அதற்கான எப்பொருளை தருகிறது என்பது கவிதை தருகின்ற படிமந்த ரூபமாகவே பார்க்க வேண்டும். பொம்மை - குழந்தை தொடர்பு நிலை என்ன என்பதுவும் வாசிப்புக் கருத்துருவமாக அமையும் ஒன்று

இதே போல் தான் எல்லாப் படைப்புகளிலும் சொற்கள் தரும் படிமங்கள் அது இணையும் சொற்களின் அமைப்பு சார்ந்தே வடிவம் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பொதுக் குறிகளையும் அடையாளங் காணமுடியும், கால- பைரவன், பாம்பு, பிதிர்களின் மடி என்பன நிகழ்வுகளின் குறியாக அமைந்துள்ளன.

உண்மையில் கவிதையை இவ்வாறு துண்டுப்படுத்திப் பார்ப்பது என்பது பொருத்தமற்ற விடயம். என்னும் ஒரு தனியனின் ஆழ்மனச் சேகரத்தில் வாசிப்பிற்கான சாத்தியங்களை எமது சமூகம் சொற்களாய்த் தந்துள்ளது என்பதை அறியும் நினைவு கொள்ளும் வாய்ப்பே இது.

படைப்பு சொற்களாலானது சொற்களுக்குள் அணைத்திருக்கும் சொற்கள் எமக்குள்ளே தான் இருக்கின்றன. அது பொருந்திக் கொள்ளும் அகத்தையும் நனவலி மனதையும் வாசிப்பதே புதுமையானது. வாசிப்பு கவிதையாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சிப் பிரதேச பேச்சுமொழி வழக்காறுகள் அல்லது தொழில்சார் பேச்சுமொழி எனவும் ஓர் சமூக மொழியியற் பார்வை .

புலோலியூர் வேல்நந்தகுமார்

வடமராட்சிப் பிரதேசமானது தனக்கெனத் தனித்துவமான கல்வி கலை இலக்கியப் பாரம்பரியத்தை கொண்டு விளங்குகிறது. இதே போல இப் பிரதேசத்தின் பேச்சு மொழியலும் தனித்துவமானது. பல்வேறு சமூகப் பிரிவுகளையும் தொழிற் கோலங்களையும் கொண்ட இப் பிரதேசத்தில் அத்தொழிற் கோலங்களுக்கேற்ப வேறுபட்ட மொழி வழக்காறுகளும் காணப்படுகின்றன. ஈழத்துப் பேச்சு வழக்கின் வலிமை மிக்க கூறாக விளங்கும் இப் பிரதேசத்தினுடைய பேச்சு வழக்கை முதன் முதலாக தனது நாடகங்களான உடையார் மிடுக்கு, நாட்டவன் நகர் வாழ்க்கை பொருளோ பொருள், முருகன் திருகுதாளம் தவறான எண்ணம் போன்றவற்றினுடாகவும் காதலியாற்றுப்படை என்ற இலக்கியத்தினூடாகவும் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையவர்கள் இலக்கிய அந்தஸ்துப் பெற வைத்தார்.

இந்த வகையில் ஈழத்தில் முதன் முதலாக இலக்கிய அந்தஸ்துப் பெற்ற பேச்சு வகையில் ஈழத்தில் முதன் முதலாக இலக்கிய அந்தஸ்துப் பெற்ற பேச்சு வழக்காக வடமராட்சிப் பேச்சுத் தமிழ் சிறப்புபெறுகிறது. இதன் பின் எற்பட்ட மரபுப் போராட்டம் என்பதையும் தாண்டி இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச பேச்சுவழக்கு மொழியை தமது நாவல்ப் படைப்புக்களில் சிறப்புற வெளிப்படுத்தியவர்களாக தெணியான், டானியல், புலோலியூர் சதாசிவம், போன்றோர் முக்கியமானவர்கள்.

இவ் வகையில் தெணியானின் காத்திருப்பு, மரக்கொக்கு ஆகிய நாவல்கள் வழியாகவும் புலோலியூர் சதாசிவத்தின் நாணயம் நாவலினூடாகவும் டானியலின் தண்ணீர் நாவலினூடாகவும் (வடமராட்சியை களமாய்க் கொண்டதால்) இப் பிரதேச பேச்சுவழக்கு மொழி சிறப்பாக கையாளப்பட்டுள்ளது.

இதே போல தமது சிறுகதைப் படைப்புக்கள் வழி இப் பேச்சுவழக்கை கையாண்டவர்களாக, தெணியான், புலோலியூர் சதாசிவம், புலோலியூர் இரத்தினவேலோன் செ. கதிர்காமநாதன், நெல்லை க. பேரன், என். கே ரகநாதன், பாலரகு, எம், தே. முருகானந்தன், ரஞ்சகுமார், குந்தவை, சோமகாந்தன், நித்திய கீர்த்தி, ராஜஸ்ரீகாந்தன், கலாமணி, கே. ஆர் டேவிற், நந்தினி சேவியர், ராஜேஸ்கண்ணா, கொற்றை பி. கிருஸ்ணானந்தன், என நீண்ட ஒரு பட்டியலையே குறிப்பிடலாம். இவர்களின் நாவல், சிறுகதைப் பேச்சு வழக்குகளில் கூட புலோலி, தும்பளை, கரவெட்டி, அல்வாய், வதிரி, திக்கம், கொற்றாவத்தை, தொண்டமானாறு போன்ற நுணுக்கமான பிரதேச வேறு பாடுகளையும் எம்மால் அவதானிக்க முடிகிறது.

அதே வேளை ஈழத்துப் புனைகதைகளின் பேச்சு வழக்கை 1980களுக்கு முற்பட்ட ஆய்வு செய்ததில் இப் பிரதேசத்தை சேர்ந்த ஆய்வாளர் வன்னிய குலம் அவர்களது பங்களிப்பும் முக்கியமான தொன்றாகும். இதே போல இப் பேச்சு வழக்குசார் ஆய்வில் வடமராட்சியின் பேராசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சிவலிங்கராசா அவர்களது பங்களிப்பும் முக்கியமானதொன்றாகும். இதே போல இப் பிரதேசத்தை சேர்ந்த கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் கலாநிதி சயதினி ரமேஸ் ஆகியோரும் இப் பேச்சுவழக்கு சொல் ஆய்வில் தேடலில் பங்களித்துள்ளனர்.

இதே போல கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் யாழ்ப்பாணத் தமிழ் என்ற பகுதிக்குள் வடமராட்சியின் பல பேச்சுவழக்குச் சொற்களை தேடி இணைத்து இப் பிரதேச பேச்சுவழக்கிற்கு சர்வதேசரீதியான ஓர் அகராதி அந்தஸ்தினை வழங்கி புத்தகச் சோலை இ.து குலசிங்கம் அவர்கள் அரும்பணியாற்றியுள்ளார். இவற்றுக்கு அப்பால் இப் பிரதேசத்தில் வழங்குகின்ற நாட்டார் பாடல்கள், கடலோரப் பாடல்கள். வாய்மொழி இலக்கியங்கள், உறவுமுறைச் சொற்கள், வேறுபட்ட தொழிற் சொற்கள், பிரதேச வேறுபாடுடைய பேச்சுமொழி வழக்காறுகள் போன்றவற்றினூடாகவும் கள ஆய்வாக வடமராட்சிப் பிரதேச பேச்சு வழக்குத் தொடர்பாக பல்வேறுபட்ட விடயங்களை இனங்காண முடிகிறது.

மொழிக்கும் சமுதாயத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான தொடர்பினைப் பற்றி சமூக மொழியிலாளரும், மொழிச் சமூகவியலாளரும், மானிட மொழியியலாளர்களும் பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொண்டு பல முடிவுகளை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகத்தின் புறச் சூழல்தான் மொழியைத் தீர்மானிக்கிறது. அத்துடன் சிந்தனையின் வழி மொழி மனிதனின் அகத்துள் இருந்துதான் பிறக்கிறது. மொழியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சு வழக்கினுடாக நம்பிக்கைகள், சடங்குகள், நாட்டார் இலங்கியங்கள், மரபுகள் பழக்கவழக்கங்கள் போன்றன பண்பாட்டு அம்சங்களாக்கப்படுவதால் அது பண்பாட்டுடன் தொடர்புபடுகின்றது.

அத்துடன் அப்பிரதேசம் சார்ந்த தனித்துவமான பண்பாடுகளையும் அவற்றினூடாக பேசும் மொழியே எடுத்துக் காட்டுகின்றது. இந்த வகையில் வடமராட்சியில் பிரதேச ரீதியான வேறுபட்ட பண்பாட்டை, வாழ்முறையை, தொழிற்கோலங்களை புரிந்து கொள்வதற்கு அவ்வப் பிரதேசம் சார் மொழிவழக்காறுகள் அதன் வேறுபாடுகள் துணைபுரிகின்றன.

இவ் வகையில் வடமராட்சியின் வல்வெட்டித்துறை , திக்கம், சமரபாகு, வதிரி, அல்வாய், உடுப்பிட்டி, இமையாணன், கரணவாய், கரவெட்டி, நெல்லியடி, புலோலி, தும்பளை, துன்னாலை, கற்கோவளம், குடத்தனை, நாகர் கோயில் என நீளுகின்ற களப்பிரதேசங்களினூடாக வேறுபட்ட தொழிற் சொற்கோலங்களை எம்மால் இனம்காணமுடிகிறது. இவ்வகையில் கரவெட்டி, புலோலி தொழில் சார் பேச்சு வழக்கினூடாக விவசாய தொழில் பேச்சுவழக்கினையும் வல்வெட்டித்துறை, கற்கோவளம் ஊடாக கடற்றொழில்சார் பேச்சு வழக்காறுகளையும், அல்வாய் வதிரிப் பிரதேசங்களினூடாக பனந்தொழில்சார் பேச்சுமொழி வழக்காறுகளையும் நோக்கி அதன் பின்னர் பிற பிரதேச, பிற தொழில்சார் பேச்சு வழக்குகள், பொதுவான உறவுச் சொற்கள் என்பவற்றை நோக்குவது பொருத்தமுடையதாகும்.

வடமராட்சியின் சிறப்பு வாய்ந்த கடல்சார் துறைமுகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினங்களில் ஒன்றாக வல்வெட்டித்துறை விளங்குகிறது. இங்கு வாழும் மக்களது பிரதான தொழில் மீனவத் தொழிலாகும். பண்டைக் காலத்தில் இப் பிரதேச துறைமுகத்தினூடாக வெல்வெட் துணிகள் அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்டதால் இது வல்வெட்டித்துறை என அழைக்கப்பட்டதாகவும் கூறுவர். இங்குள்ள சமரபாகு என்ற இடம் அரச வரலாற்றுச் சிறப்புடையது.

இங்கு ஆண்டுக்கொருமுறை நடைபெறும் இந்திரவிழா சிறப்புக்குரியது. இப் பிரதேச தொழில்சார் பேச்சு வழக்காறுகளாக லைன் வருது (கடத்தல் கப்பல்), கலப்பத்துச் செய்தல் (வள்ளங்களை புனரமைத்தல்) கிட்டம், கிசில் (வள்ளத்துவாரங்களை இறுக்கப் பயன்படுவது), தீத்தாச்சு, தீப்பா, (மீன் கூறி விற்றல்), வட்டி (முருகைக் கற்பாறைகளின் விழிம்பு), வாரக்காசு (மீன் விற்ற காசை பிரித்தல்), பேசாக்கட்டை, அறக்கொட்டியான் வலை, 'பாதை (படகு), சிலுவை நண்டு, சிங்கி நண்டு, சம்மாட்டியார், செதில், சவல் (சவுல்அடி என்ற சொல் இதிலிருந்தே வந்தது) நாறிப் போச்சு போன்றவற்றை குறிப்பிடலாம். அவர்களது பண்பாட்டை, நகைச்சுவை உணர்வை அவர்களது அம்பாப் பாடல்கள் வழியாகவும் அறிய முடிகிறது. உ - ம் ஆக கற்கோவளத்தில் பாடப்படும் அப்பாட்டிலிருந்து சில வரிகள்

''ஏலேலோ அரிராமா ஏலேலோ
மாயவனே ஏலேலோ அரிராமா
மண்ணில் வாழ் ஏலையய்யா புண்ணியமே
மாலையிந்த ஏலேலோ அழகே ஆனால்
மணவாளன் ஏலேலோ எவ்வழகு
......
இருக்குமட்டும் ஏலேலோ இருந்துபோட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப போறாள் ஏலேலோ கூப்பனுக்கு....

இதேபோல விவசாய தொழில்சார் பேச்சு வழக்காறுகளை கரவெட்டி, கம்பர்மலை, கரணவாய் தொழில்கள் புலோலி பகுதி பேச்சு வழக்காறுகள் வழி அறியமுடியும். பரந்தவெளி எனப்படுகிறது. (மாதூ, கேதூ) நடையன், போர் (சாணம்), மாவக்கை (வைக்கல்கற்றை), நெல்லக்கொண்ட பெட்டி, லாச்சுப் பெட்டி, வயல் விதைப்பின் (பரப்பு அளவு) நெட்டுழவு, குறுக்குழவு, கறுமா (சூடடிக்கும்போது நெற்கற்றையை கட்டிவிடும் கயிறு) சூடடித்தல், சூடு மிதித்தல், வயல் வெட்டு, பீலிப்பட்டை, பீலி இறைத்தல், ஏற்றம் இறைத்தல், துலாப்பாடல், சாறுதல், பாத்தி, தறை, பட்டி, நடுகைக்காய் தண்ணிமாறல், புல்லுக்கிண்டி, தாறு, சரை, நடுகை, முடிச்சல், செத்தல், அழுகல், வாடல், புழுக்குதல், பிஞ்சு, முத்தல் போன்றவற்றை விவசாய தொழில்சார் பேச்சு மொழி வழக்காறுகளாக குறிப்பிடலாம். இவற்றுள் பல இன்றைய வழக்கில் பயன்பாட்டில் இல்லாமல் மருவி வருவதுடன், சில சொற்கள் யாழ்ப்பாண தமிழிற்கான பொதுச் சொற்களாகவும் விளங்குகின்றன.

அல்வாய் வதிரி கொற்றாவத்தை தேவரையாளி பிரதேச பேச்சு மொழி வழக்காறுகளிற்கூடாக பனம் தொழில்சார் பேச்சு வழக்கு சொற்களாக பின்வருவனவற்றை இனங்காண முடிகிறது.

காதோல் (காலுக்குப் போடும் தோல்) மாதோல் (நெஞ்சுக்குப் போடும் தோல்) பூரான் (பனம் விதை. உணவு), தளர்நார் (இரண்டு கால்களுக்கிடையே கட்டப்படுவது), இட்டி பனங்கள்ளை பதம் பார்க்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுவது, சொத்தலக்கொட்டை - பனங்காயின் உள் உள்ள கொட்டை, தட்டுப்பனை - பெண் பனையின் இளம் பாளை, அரிபளை - ஆண் பனையின் இளம் பாளை, கருக்குமட்டை, பீலி - பனங்கிழங்கின் உள் இருக்கும் ஈர்க்கு, மூரி, கொட்டாங்கையில் கொக்காரை, பனங்கட்டிக் குட்டான், நெட்டி வெட்டுதல் பருமின் பனங்காய்ப் பணியாரம், சீத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஏனைய தொழில் சார் பேச்சு வழக்குச் சொற்கள் என்ற வகையில் வடமராட்சியில் சலவைத் தொழிலாளிகளிடம் வேறுபட்ட சில சொற் கோலங்களை அவதானிக்க முடிகிறது - சால் - சீலை தோய்க்கும் வாளி, பெட்டி - மினுக்குப்பெட்டி, காங்கை - வெப்பம், கோப்பாத்தல் - சலவை செய்யமுன் துணியை வெளித்துப் போடுதல், களம்பு - சோடாத்தூள், கமத்துதல் - துணியைத் தோய்த்தல், பிசங்கல்- ஊத்தை, வெள்ளாவி போடல் - உடையை அவிக்கும்முறை, தவத்துதல் - உடையை முறுக்கிப் பிழிதல், வாடப்போடுதல் - காயப்போடல் கல்லடி - சீலைதோய்க்கும் இடம், வேடித்தல் - துவைத்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

உடுப்பை சேர்த்துக் கொள்வதை மராப்பு, பொட்டலி என அழைப்பர். வெளுத்துப் போடுவன், நனைச்சுச் சுமக்கிற வேலை பாக்காத போன்ற பேச்சுவழக்குச் சொற்கள் இத்தொழிலடியாகவே பிறந்தவை. இவர்கள் தமது தொழிற்களத்தில்த்தான் இத்தகைய சொற்களை பயன்படுத்தக்கது.

நகைத்தொழிற்களத்தில்த்தான் இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களை பயன்படுத்துவதாகவும் வீட்டில் பயன்படுத்துவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. நகைத்தொழிலாளரிடமும் வேறுபட்ட தொழில் மொழி வழக்காறுகளை காண முடிகிறது உம்கசர் ஆக 1 தோலா ஒன்றரைப்பவுண் (வெள்ளி) மஞ்சாடி (2 குண்டுமணி), வட்டில் (பித்தளை), கொம்புத்தாலி, அம்மன் தாலி, விராகன்(பழையகாலத்தில் பொன்னை நிறுக்கும் அளவு) கம்மல் (தோடு), களுத்தான், காலான், பீலிக்காப்பு, நெற்றிப்பட்டம் தூக்கணம் வாச்சி, (மரம் வெட்டும் கருவி), துறப்பணம் (கறீல்லர்) பத்தாயம், பாடடித்தல் (மரத்தை சதுரமாக்கல்) சீவுதாள், போன்றவற்றைக் குறிப்பிடலாம், கம்பு விளையாட்டு (சிலம்படிச்) சொற்களாக சீனடி, அடிமானம், இறுக்கி, சறுக்கி, பின் உடான், கவீசு, சூரியவீச்சு, மழு, கர்நாடகம், துடுக்கானம், குறவஞ்சி, மறவர்க்கானம் - போன்ற சொற்களைக் குறிப்பிடலாம்.

உறவுச் சொற்களாக ஆந்தை, அக்கம்மா, அக்காத்தை, பெத்தாத்தை, அக்காச்சி, அம்மாச்சி, வளத்தம்மா, பெத்தாச்சி, சீனிஅம்மா, கொம்மான், கொத்தார், கொப்பு, கோத்தை, குஞ்சி அப்பு, அக்கை, வேலாத்தை (ஆண்களுக்கு பெண்பால் விகுதி) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் பல தற்கால வழக்கில் மருவி மாறிப்பயன்படுகின்றன. இவ் வகையில் வடமராட்சியின் பேச்சு மொழி வழக்காறுகளின் தனித்துவப் படைப்புக்கள் வழியாகவும் பிரதேச வேறுபாடு மிகு தொழிற்சொற் கோலங்கள் மூலமும் உறவுச்சொற்கள் மூலமும் அறிய முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகமும் கல்வியும்

திருமதி.ஈ.குட்டித்தம்பி

'அரிது அரிது மானிடராய்ப்பிறத்தல் அரிது' என்பது ஔவையின் வாக்கு. மனிதப்பிறப்பின் அருமையைப் பற்றிக் கூறியுள்ளார். பகுத்தறிவு என்று கூறப்படுகின்ற ஆறாவது அறிவைப் பெற்றவன் மனிதன். எதையும் பிரித்தறியக்கூடியவன் இத்தகைய சிறப்புக்குரிய மனிதன் கல்வியைப் பெற்று தனது அறிவை வளர்த்துக் கொள்கின்றோம். கல்வியைப் பெற்றுக் கொள்ளும் போது ஆன்மீகம் தொடர்பான விடயங்களையும் அறிந்து தன்னை வளர்த்துக் கொள்ளவேண்டும். கல்வியோடு, ஆன்மிகத்தையும் அறிந்து அதன்படி வாழ்பவனே முழுமனிதனாகின்றான் எனவே ஆன்மீகம் இல்லாத கல்வினால் எவ்வித பயனும் இல்லை என்றே கூறிக்கொள்ளமுடியும்.

ஆன்மீகம் என்பது ஆன்மாவுடன் தொடர்புடையது ஒவ்வொரு மனிதனும் ஆத்மா எனப்படும் ஆன்மாவோடுதான் இருக்கின்றான். இந்த ஆன்மாபற்றிய அறிவை தான் பெறும் கல்வினூடாக ஓரளவுக்காவது அறிந்து கொள்ள வேண்டும். ஆத்மா அழிவில்லாதது. ஆத்மா இறைவனை அடைவதே அதன் இலட்சியமாகும். இலட்சியத்தை அடைவதற்கு ஆத்மா என்ன செய்யவேண்டும். ஆத்மாவோடு ஒட்டிக்கொண்டிருக்கும் ஆணவம் முதலிய தீயகுணங்களை எவ்வாறு இல்லாமல் செய்யவேண்டும் என்பதை அறியவேண்டும். இவ்வாறு அறிவதனூடாகவே மனிதப்பிறவியின் சிறப்பைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவனாகின்றான். எனவே ஆன்மீகமும் கல்வியும் நெருங்கிய தொடர்புடையன என்பது புலனாகின்றது.

இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது இவ் இயக்கத்தின் சக்தி யார்? இயற்கை நிகழ்வுகள் ஒரு ஒழுங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் ஒரு சக்திதான் காரணமாக அமைகின்றது. இந்த சக்திதான் கடவுள் என. வேதகால மக்கள் இறைநிலை கொடுத்து வழிபட்டார்கள். அதன் தொடர்ச்சியாக நாமும் இயற்கை சக்திகளுக்கு உருவங்கள் கொடுத்து இன்று வழிபடுகின்றோம்.

அன்பே உருவான இறைவனை வழிபடுவதன் ஊடாகவும் ஆன்மீகத்தை வளர்த்துக் கொள்ளமுடியும். மனதிலே இறைசிந்தனை உள்ள ஒருவன் தனது மனச்சாட்சிக்குப் பயந்து தான் காரியங்களை ஆற்றுவான். இவ்வாறு செய்யும்போது உலகில் தீமைகள் நடக்க வாய்ப்பு இல்லாமல் போகின்றது.

நாம் பிறந்ததன் பயனையும் அடைய முடியும். அன்பின் வடிவமே இறைவன் என்பதால் தான் அனைத்து உயிர்களிடமும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். இதனை இந்துமதத்தின் அறக்கோட்பாடுகளும், நீதிநூல்களும் எடுத்தியம்புகின்றன. அத்தோடு இந்தமதப் பெரியார்கள் பலர் வாழ்ந்து காட்டியும் உள்ளனர்.

எனவே தான் ஒருவர் பெறும் கல்வியோடு ஆன்மீகம் பற்றிய கருத்துக்களையும் அறிந்திருப்பதால் வாழ்க்கை ஒளிமயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'

என்ற நீதிநூல் கருத்தே இங்கு மிகுந்த சான்றாகின்றது.

ஒருவன் பாவச் செயல்களைச் செய்யாமல் இருப்பதற்கும் மற்றவர்களுக்கு நன்மைகளையே செய்வதற்கும் ஆன்மீகமே வழிகாட்டுகின்றது. தற்காலத்திலே சமுதாயத்திலே காணப்படுகின்ற பாவச் செயல்கள் அனைத்துக்கும் ஆன்மீகம் பற்றிய சிந்தனை அருகிவிட்டதே காரணமாகின்றது.

எனவே கல்வியோடு, ஆன்மீகம் தொடர்பான நமது நடைமுறை வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைக்கருத்துக்களையாவது நாம் அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

அவற்றைக் கடைப்பிடிப்பதனூடாக எமது மனிதப்பிறப்பின் பிறவிப்பயனை அடைய முடியும். எனவே நாம் பெறும் கல்வியோடு ஆன்மீகத்தையும் அறிந்து வாழ்ந்து நற்கதி பெறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக வலைத் தளங்களும் அவற்றின் தாக்கங்களும்

தி.சுபாகரன்

இன்றைய தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப யுகத்தில் சமூக வலைத்தளங்கள் சமூகத்தில் மிகப் பெரிய தாக்கங்களை உண்டுபண்ணி வருகின்றது. எனவே அத் தாக்கங்கள் பற்றி இங்கு நோக்குவோம்.

முதலில் சமூக வலைத்தளம் என்றால் என்ன என்பதை இங்கு விளக்குவது அவசியமாகின்றது. சமூக வலைத்தளம் என்பது உலகின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள ஒவ்வொரு தனியாளும் தமக்கிடையே தொடர்பு கொண்டு ஒன்றாக ஒரு கற்பனைச் சமூகத்தை (virtual Community) உருவாக்க வழிசமைக்கும் இணையத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு சேவையாகும். சுருங்கச் சொல்லின் உலகின் எல்லாப் பாகங்களிலுமுள்ள மனிதர்களும் தமது அபிப்பிராயங்களையும் உணர்வுகளையும் தம்மைப் பற்றிய விபரங்களையும் ஏனையவர்களோடு பகிர்ந்து கொள்வதற்கு வசதியளிக்கும் இணையத்தளங்களே இவையாகும்.

1990 களின் மத்தியில் இவை மிகவும் பிரபல்யம் அடையத் தொடங்கின. அந்தவகையில் இன்று ஏராளமான இணையத்தளங்கள் இந்நோக்கத்திற்காகத் தினம் தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகமாகி வருகின்றன. இவற்றுள் Facebook, Myspace, Google+, hi5, Blogster, Cafemom, Caring Bridge, Classmates.com, Faceparty, Linkedin, Twitter, Daily Booth போன்றன அதிகளவில் பயன்படுத்தப்படும் இணையத் தளங்களாக உள்ளன. இவற்றுள் சில பொதுவான அனைவரினதும் பாவனைக்காகவும் வேறு சில குறிப்பிட்ட சில பகுதியினருக்கெனவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் எமது இலங்கையைப் பொறுத்த வரையில் facebook.com அதிகளவு பயன்படுத்தப்படுகின்ற ஒன்றாகவுள்ளது. இதற்கு அடுத்தடுத்த நிலைகளில் Google+, Twitter, LinkedIn என்பன காணப்படுகின்றன.

இனி இச் சமூக வலைத்தளங்களினால் கிடைக்கும் அனுகூலங்கள் பற்றி நோக்குவோம். இச் சமூக வலைத்தளங்கள் ஊடாக விரைவான உலகளாவிய இணைப்பை உலகில் வாழும் தனியாள்களுக்கிடைய உண்டுபண்ண முடிகின்றது. (World wide Connectivity). உங்கள் பழைய பள்ளி நண்பர்களையோ அல்லது உங்கள் முதல் வகுப்பு ஆசிரியரையோ அவர்கள் இப்போது எங்கு உள்ளனர்? எவ்வாறு உள்ளனர்? என அறிவதற்கும் அவர்களோடு உரையாடலை மேற்கொள்ளவும் இவ் வலைத்தளங்கள் வழிவமைத்துள்ளன. மேலும் இவ் உலகளாவிய இணைப்பின் மூலம் புதிய வேலை வாய்ப்புக்களைக் கண்டறியவும் சேவைகளை வழங்கவும் பெற்றக்கொள்ளவும் தனிப்பட்ட, தொழில்சார்ந்த ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும் இச் சமூக வலைத்தளங்கள் உதவி நிற்கின்றன. அடுத்து குறித்த துறையில் ஆர்வமுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் ஒன்றாக இணைந்து (Commonality of Interest) அத் துறை சார்ந்த விடயங்களை ஆய்வு செய்வதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. உதாரணமாகத தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தைக் கற்கும் மாணவர்கள் அனைவரும் ஒரு குழுவாக இணைந்து தமது பாட விடயங்களைளக் கலந்துரையாடி விடயப் பகிர்வில் ஈடுபட இவை வழிசமைக்கின்றன. இங்கு இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்த ஒரு பெரிய குழுமமாக செயற்படுவதற்கான வாய்ப்புக் கிடைப்பது மிகப் பெரிய ஒரு நன்மையாக அமைகின்றது. மேலும் இச் சமூக வலைத்தளங்கள் ஊடாக உடனுக்குடனான தகவல் பரிமாற்றத்தினை மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல் (Real Time Information Sharing) இன்னுமோர் நன்மையாக உள்ளது. இதனூடாக மாணவர்கள் தமக்கிடையே கலந்துரையடாலை மேற்கொள்ள முடிகின்றது. முகாமையாளர்கள் தமது குழுக் கூட்டங்களை நிகழ் நேரத்தில் (Online) நடத்தவும் வியாபர முகவர்கள் தமது வாடிக்கையாளர்களோடு தொடர்பு கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படுகின்றது. நிறுவனங்கள் தமது சேவைகளுக்கும் பொருட்களுக்கும் இலவசமாக விளம்பரம் செய்யவும் (Free Advertisement) சமூக வலைத்தளங்கள் பெரிதும் உதவுகின்றன. சமூக வலைத் தளங்களினூடாக செய்திகள் பரவலடையும் வேகம் அதிகரிக்கப்படுகின்றது. (Increase News Cycle Speed). இதன் காரணமாக இன்று பல செய்தி நிறுவனங்கள் இச் சமூக வலைத் தளங்களுடன் பங்குதாரர்களாக மாறியுள்ளன. உதாரணமாக You tube, twitter, Facebook போன்ற சமூக வலைத்தளங்களில் செய்திகள் உடனடியாகப் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. எனவே ஒருவர் இத் தளங்களைப் பார்வையிடும் போதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது உலகில் என்ன நடைபெறுகின்றது என்பதை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிகின்றது. பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட பல எழுத்தாளர்களை வெளிச்சம் போட்டுக் காட்டி அவர்களுக்கான இலக்கிய அந்தஸ்த்தை இச் சமூக வலைத்தளங்கள் பெற்றுக் கொடுக்கின்றன என்றால் மிகையாகாது. இத்தகைய இன்னோரன்ன சேவைகளை வழங்கும் இச் சமூக வலைத்தளங்கள் முற்றிலும் இலவசமாகவே தமது சேவையை வழங்குகின்றன.

இத்தகைய அதிகளவான நன்மைகளை வழங்கும் இச் சமூக வலைத்தளங்கள் இன்று பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகும் நிலை இன்று எம் மத்தியில் காணப்படுகின்றது. இவற்றின் பாவனையால் இளைய தலைமுறையினர் வழிதவறிப் போய் விடுகின்றார்கள் என்ற கருத்து நிலை மேலோங்கி வீடுகளிலும் பாடசாலைகளிலும் இவற்றின் பானையை முற்றாகத் தடைசெய்யும் நிலையும் காணப்படுகின்றது. எனவே இத் தளங்களினூடாக எத்தகைய பிரதிகூலங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன? என்பது பற்றியும் இங்கு ஆராய வேண்டியுள்ளது. அதிகளவு நேரம் இச் சமூக வலைத்தளங்களினால் வீணடிக்கப்படுகின்றது என்பது பெருமளவு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டாக உள்ளது. அண்மையில் செய்யப்பட்ட ஆய்வொன்றில் Facebook பாவனையாளர்கள் மாதத்தில் 6 மணித்தியாலங்களை ஒருவர் இத்தளத்தில் செலவளிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பெருமளவு நேரம் பயனற்ற முறையில் உரையாடல், விமர்சித்தல் போன்றவற்றில் செலவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இச் சமூக வலைத்தளங்களில் பெரும்பாலானோர் நேரடியான முகத்திற்கு முகம் கொண்ட தொடர்படலைத் தவிர்த்து (Face to face) தம்மைப் பற்றிய பொய்யான சுயவிபரங்களைப் பிரசுரித்து தாம் வேறொருவர் போல் பாசாங்கு செய்து தொடர்பாடலை மேற்கொண்டு மற்றவர்களை ஏமாற்றக் கூடிய அபாய நிலை உள்ளது. (Face to face Connections are Endangered) இவ்வாறு ஏமாற்றப்பட்டவர்கள் பலர் நம்மில் உள்ளனர். Facebook இல் ஆரம்பித்துக் கருக்கலைப்பில் முடிந்த பல பரிதாபக் காதல் கதைகளை நாம் பத்திரிகைகளில் பார்த்ததுண்டு. சிறுவர்களுக்கு முறையற்ற தொடர்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இங்கு அதிகமாகவுள்ளது. குறிப்பாகப் பாலியல் தொடர்பான விடயங்களுடன் அவர்களைத் தொடர்புபடுத்தும் வேண்டத்தகாத தொடர்புகளுக்கு சிறுவர்கள் உள்ளாக்கப்படலாம் அடுத்து ஒருவரினால் சமூக வலைத்தளங்களில் வழங்கப்படும் சுயவிபரங்கள் மிகவும் திறமையான முறைகளில் களவாடப்படுகின்றன. (Identity Theft) இதனால் பெருமளவு இழப்புக்களைச் சந்திக்கவும் நேரிடலாம். மேலும் சமூக வலைத்தளங்கள் நமது சுயவிபரங்களையும் எமது இணையப் பழக்கங்களையும் (Personal Information and Web Browsing Habits) எனையவர்களுக்கு விற்பனை செயகின்றன. (Corporate Invasion of Privacy). 2011 இல் Facebook 3.8 பில்லியன் டொலர்களை வருமானமாகப் பெற்றுள்ளது. அங்கத்தவர்களிடம் எதுவித கட்டணத்தையும் அறவிடடாத நிலையில் எவ்வாறு இத் தொகையினை ஈட்டிக்கொள்ள முடிகிறது என்ற வினா இங்கு எழுகின்றது. இங்கு அங்கத்தவர்களின் விபரங்கள், அவர்களால் பயன்படுத்தப்படும் சொற்கள் (Keywords), அவர்கள் அடிக்கடி தரிசிக்கும் இணையப்பக்கங்கள் போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களை விளம்பர நோக்கிற்காக ஏனைய நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதன் ஊடாகவே இவ் வருமானம் ஈட்டப்படுகின்றது. எனவே ஒருவரது அந்தரங்கத்தைப் பாதுகாத்தல் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. (Lack of Anonymity)

இச் சமூக வலைத்தளங்களின் நன்மைகளையும் தீமைகளையும் ஆராய்ந்து பார்த்த நாம் இப்போது இச் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துதை ஊக்குவிப்பதா அல்லது இல்லையா என்ற வினாவுக்கும் விடைகாண வேண்டியவர்களாக உள்ளோம். எந்தவொரு விடயத்திற்கும் நன்மை, தீமை என்ற இரண்டு பக்கங்கள் இருக்கத்தான் செய்கின்றன. எனவே தீமைகளைத் தவிர்த்து அவற்றிலுள்ள நல்லவற்றைத் தேர்ந்தெடுப்பதே அறிவார்ந்த செயலாகும். எனவே சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் போது அங்கு பயன்படுத்தப்படும் சொற்கள் விதிகள், நிபந்தனைகள்என்பவற்றைத் தெளிவாக அறிந்துகொண்டும் பாதுகாப்பு (Security), தனியுரிமை (Privacy) தொடர்பான விடயங்களை விளங்கிக்கொண்டும் பயன்படுத்துவதன் மூலம் இவற்றினால் ஏற்படக்கூடிய வேண்டத்தகாத பிரச்சினைகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடிகின்றது. பாடசாலைகளில சமூக வலைத்தளங்களை மாணவர்கள் பயன்படுத்தும் போது அவர்களை கண்காணிப்பு (Monitoring) செய்தல் அவசியமாகின்றது. இதற்காக சமூக வலைத்தளங்களை அவர்கள் பய்படுத்தாது முற்றாகத் தடுப்பது என்பது அவர்களுக்கான கற்றல் சந்தர்ப்பத்தை மறுக்கின்ற ஒன்றாகவே அமையும். சமூக வலைத்தளம் ஒன்றில் எவ்வாறு தமமை இணைத்துக் கொள்வது? அதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு தகவல்களை வழங்குவது? எவ்வாறு உரையாடலை மேற்கொள்வது? எவ்வாறு படம் ஒன்றைப் பதிவேற்றம் செய்வது? பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள படம் ஒன்றை எவ்வாறு தனது கணனியில் பதிவிறக்கம் செயது கொள்வது? எவ்வாறு ஒருவருக்கு அழைப்பு விடுப்பது? எவ்வாறு வந்த அழைப்பை ஏற்றுக்கொள்வது அல்லது மறுப்பது? போன்ற அடிப்படையான விடயங்களை அவர்கள் ஆசிரியரின் வழிகாட்டலுடன் கற்றுக்ககொள்ள வேண்டியது அவனது எதிர்காலக் கற்றலுக்கு அவசியமான ஒன்றாகவே உள்ளது.குறித்த பாடம் தொடர்பாக அவன் வேறு பாடசாலை மாணவர்களோடு கலந்துரையாடுவதற்கான வாய்ப்பை வழங்குவது அவசியமாகின்றது.

வீடுகளில் கணனிகளை எல்லோரும் அவதானிக்கக்கூடிய இடங்களில் வைப்பதன் மூலம் சிறுவர்களை நேரடியாக அவதானிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

எம்மால் உறுதிப்படுத்தப்பட முடியாதவர்களை நண்பர்கள் பட்டியலில் சேர்க்காது விடல், அவசியமற்ற சுய விபரங்களை வழங்காது விடல், தேவையை முடிவு செய்து அதற்காக மட்டும் இவற்றைப் பயன்படுத்துதல் அதாவது குறிக்கோள் அற்ற நிலையில் சமூகவலைத்தளங்களில் சஞ்சரிப்பதைத் தவிர்த்தல் போனறவற்றினூடாக இத்தளங்களினூடாக எமது அறிவாற்றலைப் பெருக்கி ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்புள்ள பிரஜைகளாக எம்மை ஆக்கிக் கொள்வதே அறிவுடைமை ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் கல்வியில் பெற்றோரின் பங்கு

"கலைப்பருதி" கே.ஆர்.திருத்துவராசா

ஒவ்வொரு மனிதனது வாழ்வியல் நிலையினை நோக்கும் போது அவனது சமகால கல்வி, பொருளாதாரம் சமூக ஏற்ற இறக்கங்களோடு கிராமம் சார்ந்த அறிவு ஜீவிகளின் எண்ணிக்கையும் அவர்களது சமூகம் சார்ந்த பண்பாட்டு உறவுமுறை என்பன ஐந்து தசாப்த்தங்களுக்கு முன்பாக கற்றல் சூழல் எவ்வகையில் அமைந்திருந்தன என்பதனை பார்ப்போமானால் அனைத்து கிராமம் சார்ந்த பாடசாலைகளிலும் ஆசிரியர்களினால் மாணவ மாணவிகளுக்கு அகரவரிசை உயிரெழுத்தனைத்தையும் எழுதி ஆரம்பிப்பதோடு பனை ஓலை ஏடு ஒன்று மாணவர்களுக்கு வழங்கப்படும் இவ்வகையிலான ஆரம்ப போதனையை பிள்ளைகளிற்கு பெற்றோரினால் ஆறாம் அகவையில் கல்விக்கான அத்திவாரமாக அமையும்.

தரம் ஐந்துவரை ஒரு சில பாடநூல்களோடு சிலேற்(கற்பலகை) மற்றும் சிலேற்பென்சிலும் கற்றல் உபகரணங்களாக அக்காலப்பகுதியில் பயன்பாட்டில் இருந்தமை அறிந்ததொன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஆண்டுகாலமாக புளக்கத்திலிருந்து 'ஏடு' காலவோட்ட நகர்வின் பிரகாரம் அச்சேற்றிய காகிதவடிவினில் வாணிவிழா நன்நாளில் மாணவர்கள் அகரத்தினை எழுதியவர்களாய் மாணவர்களின் கரங்களில் பாடநூல்களும் இணைந்து கொண்டன.

அக்காலப்பகுதியில் கல்விக்காக உருவாக்கம் பெற்ற கிராம் சார்ந்த பாடசாலைகள் கிடுகினால் வேயப்பட்ட கொட்டில் கூடங்களைாக அவை காட்சி தந்தன. 1970களில் பெரு முயற்சியும் அரசின் பொருளாதார உதவியுடன் பல கட்டிடங்களாகவும் இந்நாட்களில் சில பாடசாலைகள் இருமாடிக் கட்டிடங்களாக கிராமங்களில் காட்சி தருவது கண்கூடு.

மாணவர்களின் கற்றல் முறைமை கடந்த ஓரிரு தசாப்தங்களுக்கு முன்பாக விரிவாக்கம் பெற்றிருப்பது ஓர் கலங்கரை விளக்காக அமைய பெற்று ஆரோக்கியமான கற்றல் வளங்களாக கிராம பாடசாலைகள் அமைய காணப்படுவது கவனிக்கதக்க இன்றைய வரலாறாகும்.

பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு எவ்வகையில் அமைவது ஆரோக்கியமானது என்பதனை பார்க்கும் போது கற்றலுக்குரிய உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதோடு மட்டும் நிறைவு பெற்று விடுவதில்லை பின்னிப்பிணைந்த பற்பல உறவு சார்ந்தவர்களோடு வாழுகின்ற இல்லத்திலே மாணவர்கள், கல்வியும் தொடர வேண்டிய நிலை காணப்படும். தாய், தந்தை மாமன் மாமி பேரன் பேர்த்தி என்போர் சராசரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களாக திகழ்வது மட்டுமன்றி மின் சாதன பொருட்கள் றேடியோ, ரீவி போன்றவைகள் கையாளுகின்ற கால நேரங்கள் மாணவர் கல்விக்கு இடையூறு வழங்காத வண்ணம் அமைய வேண்டும் அவர்களின் உரையாடல்கள் பழமொழிகள் உபகதைகள் நன்னெறி போன்றவைகள் மாணவர் நெஞ்சினில் பதியவைக்கும் புதிய கருத்துக்களாக அமைவது நலமானதாக அமையும்.

குறிப்பாக, அதிக மதுபானம் அருந்துகின்ற தந்தையர்களின் நடவடிக்கை பொருளாதார சீரழிவு மட்டுமல்ல தேகாரோக்கியம் கெட்டுப் போவதோடு மாணவர் கல்வியும் சீரழிவின் எல்லையை தொட்டு நிற்கும் என்பது காண்பு மட்டுமல்ல பேசப்படுவதொன்று.

பாடசாலையில் கல்வியை ஆரம்பிக்கின்ற மாணவர்கள் கிராமத்து பாடசாலைகளில் பெற்றோரினால் 5ஆம் ஆண்டு கல்வியை பெறுகின்றனர். அவர்களது கல்வி பயணத்தில் நான்காம் ஆண்டினிலே நடப்பாண்டு தோறும் ஆவணி மாதத்தில் நடைபெறவிருக்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்கான கல்விமுறைமையில் பெற்றோர்களால் முன்வைக்கப்படுகின்ற கற்றல் வழிகாட்டல் என்பது மாணவர்களது உள்ளத்தில் ஏற்படுத்தப்படுகின்ற மேலதிக சுமையாகவும் ஒரு வகை திணிப்பாகவும் அமைவதும் பல வருடங்களாக தோற்றுவித்த நடைமுறையிலான மாணவர் கல்விப் பயணம் இக்காலப் பகுதியில் இன்றும் எண்பது வீதமான பெற்றோரின் மனநிலை அவ்வகையில் அமைந்திருப்பதனை அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூற்றின் அடிப்படையில் எழும் செய்தியானது புலமைப்பரிசில் பரீட்சையில சித்தியெய்தும் மாணவர்கள் பல்கலைக்கழக மட்டத்தில் விசேட பாடங்களில் உயர்கல்வியை பெற்றிருப்பது பத்துவிதீமானது என்பது கல்வியியலாளர்களின் கருத்தாகும்.

நேரத்திணிப்பினூடாக பெற்றோரின் பிள்ளைகளுக்குரிய கல்விசார்ந்த அதி உன்னத கல்விசார் கவனிப்பு என்பது மாணவர்களின் உளப்பாங்கினை பாதிக்கும் என்பது மேலுமொரு ஆய்வுக் கணிப்பாகும்.

கிராம பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்களை நகர கல்லூரிகளில் சேர்த்து கற்க வைக்கின்ற ஓர் முன்மாதிரியான மனோபாவம் அண்மைக்காலத்தில் பெற்றோர் மனதில் பதிந்திருந்தாலும் இன்று எழுச்சி பெற்றிருப்பது அறிதல் மட்டுமல்ல பாடசாலை விடுகைபத்திரம் பெற்றுக்கொள்வதில் கல்வி வலயம் சார்ந்த விதிக்கமைவான கட்டிறுக்கங்கள் பேசப்படுவதும் கண்கூடு.

ஐந்தாம்தர பாட பரீட்சையில் பெற்றோரின் மனோ நிலையின் எழுச்சி வீதம் O/L, A/L பரீட்சைகளில் பதினாறு வயதினை பெற்றிருக்கும் அம் மாணவர்களின் பக்கமே பரீட்சைக்கான வழிகாட்டல் விட்டுவிடுவதான ஓர் உணர்வினைப் பெற்றவர்களாக பல பெற்றோர் சமூகத்தில் காணப்படுவதும் கவனிக்கத் தக்கதொன்று.

பாடசாலை நிர்வாகத்துடன் மாணவர் கல்வி தொடர்பாக பெற்றோர்கள் மாதம் இருமுறையேனும் கலந்துரையாட வேண்டும் என்பது கல்வியாளர்களுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான செய்தியாகும். இவ்வகையிலான செய்தியானது பிள்ளைகளின் கல்வியில் பாடசாலை நிர்வாகத்துடன் எத்தனை பெற்றோர் கவனத்தில் கொள்கின்றனர் எனும் வினாவிற்கு ஒருசிலர் மட்டுமே என்பதுதான் பதிலாகும்.

அன்றைய பழைய மாணவர்கள் இன்றைய பெற்றோர்களாகவும் வெளிநாடு சென்று பொருளீட்டால் முறமை என்பது சமூக மட்டத்தில் கல்வி சார்ந்த ஓர் எழுச்சியை தோற்றுவித்திருப்பது எனும் கருத்திற்கு மாறாக பேசமுடியாது எனலாம் கணவன் மனைவிக் இடையிலான உரையாடல்கள் ஒரே புள்ளியை தொட்டு செல்லும் வண்ணம் அமையவேண்டும்.

இக்கட்டுரையின் ஆரம்ப செய்திதாங்கிய காலநிலையினில் கிராமம் சார்ந்த பட்டதாரிகள் என்போரை விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகவே தோற்றம் பெற்றனர். பின் ஒவ்வொரு தசாப்த்த நகர்வுகளோடு இன்று பல்கலைக்கழகம் சென்றோரும் புகு மாணவர்கள் எனப்பலர் எம்முன் நிமிர்ந்து நிற்கின்றனர்.

பிள்ளைகளின் கல்வியில் முப்பிரிவினரின் பங்களிப்பு மிக அவசியம் என்பதனை நோக்கினால் பாடசாலையில் ஆசிரிய சமூகத்துடனான நேரமான ஆறு மணியாகவும் பிற்பாடு தனியார் கல்விநிலையம் தவிர்நத பல மணி நேரங்களில் பெற்றோருடன் உரையாடுதல், விளையாடுதல் எனும் நேர செலவீனம் உண்டுறங்குதல் எனும் வாழ்வியல் கணங்கள் பல மணித்தியாலங்களாகும். முப்பரிவு என்போர் மாணவன் ஒழுங்காக பாடசாலை செல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொன்று பெற்றோர் கற்றல் உபகரணங்களை சரிசெய்து காலம் தாழ்த்தாது பள்ளிக்கு அனுப்புதல வேண்டும். மூன்றாவது ஆசிரிய சமூகம் தமக்குரிய கற்பித்தல் செயற்பாட்டினை நிறைவாக செய்யவேண்டும் எது எப்படி இருப்பினும் பெற்றோரின் பங்கு கற்றலுக்கான வழிகாட்டல என்பன முக்கியத்துவம் பெறுகின்றது.

எனவே தான் ஒவ்வொரு பெற்றோரும் தத்தமது வாழ்வியல் நகர்வினோடு பிள்ளைகளின் கல்வி மேன்மை பெற்று அவர்களது எதிர்கால வாழ்வியலுக்கான உளத்தினிய பற்பல இலட்சியங்களோடு தம்மை தியாகம் செய்பவர்களாக அமைவதன் மூலமே மாணவச் செல்வங்களின் கல்வியில் பெற்றோரின் பங்கு ஆரோக்கியமானதாக அமையும் என்பது நிதர்சனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல்..... நுட்பம்

**ஆ.வினோதன்**

பூமிப்பந்தின் அசைவு ஒரு தூண்டலுக்கமையவே நிகழ்கின்றது. அத் தூண்டலின் தகவல் இப்பிரபஞ்சத்தினை ஆழும் கண்ணுக்கு தெரியாத நுண்ணிய சக்தியால் பயன்படுத்தப்படுகிறது. இந்த சக்தியை இன்றும் ஆய்வு செய்து கொண்டே இருக்கிறார்கள் சமயவான்களும் அறிஞர்களும் விஞ்ஞானிகளும் இன்று ஒட்டு மொத்த அறிவியல் சார் உலகமே இந்த ஆய்வில் ஈடுபடுகின்றது.

எதுவாகினும் அந்த சக்தியை அறிவியல் பூர்வமாகவும் சான்றுடனும் காட்டினாலே அன்றி இதனை விளங்கி கொள்ள முடியாது. இயற்கையின் இச்சக்திகள் பற்றிய தகவல்களின் முரண்பாடுகளே பல மதங்கள் பூமியில் தோன்றுவதற்கு காரணமாக இருக்கிறது என நம்புகின்றோம்.

மனிதன் கருவாகி சிசுவாகி பூமிப்பந்தை எட்டும் வரை அதனைக் கண்களால் கண்ணுறாமலே புறத்தில் கிடைத்த தகவலினதும் மனவெண்ணத்தின் தூண்டலினால் கிடைத்த தகவலின் அடிப்படையிலும் தான் அதனை வளர்க்கிறோம். பூமிப்பந்துக்கு கருவான சிசு குழந்தையாய் தவழ்ந்த பொழுது ஒவ்வொன்றாய் அறிமுகப்படுத்துகிறோம். தகவல்களின் தகவமைப்பே மனிதனின் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையாகும்.

உலகம் அசைவதும், சுற்றுவதும் எப்படி அவன் செயலே இந்த அறிவியல் உலகம் சுற்றுவதும் அசைவதும் தகவலாலே என்பது தர்க்க ரீதியானது. ஆதி முதல் அந்தம் வரை அறிவுடன் தொடர்புபட்டது. ஆதாரமாய் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவலை செம்மையாக கையாளுபவனே போட்டி உலகில் முன்னேற முடியும். மனிதன் தோன்றிய காலம் முதல் தகவலின் பயன்படுத்துகை நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. தகவலின் பரிமாற்று முறைகளே மாறுபடுகின்றன. ஆரம்பத்தில் சைகை குறியீடாக இருந்து, இந்த யுகத்தில் தானியங்கி இலத்திரனியல் மூலம் தகவல் பரிமாற்றம் நிகழ்கிறது.

ஒரு தொழிலை வினைத்திறன் மிக்க வகையிலும் செயற்றிறன் மிக்க வகையிலும் மேற்கொள்வதற்கு உதவுவது யுக்தியாகும். இதனை நுட்பம் என்றும், தந்திரம் என்றும் உபாயம் எனவும் அழைப்பர். இந்த வகையில் தகவல் தொழிநுட்பமே வெற்றிகரமான வாழ்வுக்கும், வினைத்திறனான பணிக்கும் அத்திவாரம் ஆகும்.

ஆரம்பகாலத்தில் தகவலுக்கான அவசியமே காணப்பட்டது. பின்னாளில் இலத்திரனியல் சாதனங்களின் வருகைக்கு பின்னரே தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்தது. புராதன செய்தி கடத்தும் முறைகளை விட (புறா, சைகை, அசைவுகள்) தொலைபேசியின் வருகையும், இணையம், மின்னஞ்சல் என்பவற்றின் புரட்சியுமே விரைவான தகவல் பரிமாற்றத்திற்கு வித்திட்டது எனலாம்.

இப் பூவுலகம் ஒரே நேரத்தில் இரவாலும் பகலாலும் நிறைந்து காணப்படுகிறது. எங்கோ ஓர் இடத்தில் பகலெனில் இன்னோர் இடத்தில் இரவு சாதாரண உலகில் இவை இரண்டையும் ஒரே நேரத்தில் பார்க்க முடியாது. ஆனால் தகவல் தொழில் நுட்ப புரட்சியின் பின்னர் வீட்டிலிருந்தவரே சூரியன் மறைவதையும் உதிப்பதையும் பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக இயற்கை நிகழ்வுகளைக் கூட துல்லியமாக பார்க்கக் கூடிய அதே வேளை எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் நிகழ்கின்ற நிகழ்வுகளை எல்லாம் சம நேரத்தில் தரிசிக்கக் கூடிய நேரலை ஒலி ஒளிபரப்பு தொழில் நுட்பத்தின் பாற்பட்டது.

உலகம் நான்கு சுவர்களுக்குள்/ ஒரு கணனிக்குள் சுருக்கி விட்டது. வியாபார உலகில் சந்தை வெளி என்றும் சொல்லின் ஊடாக இலத்திரனியல் வர்த்தகம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவ் வர்த்தகம் இன்னும் இன்னும் சுருங்கி பொருள் பரிமாற்றத்தில் சாதனைகளை படைக்க முற்படலாம்.

இதேவேளை மருத்துவ உலகில் ஒரு உயிரை மீட்டெடுக்கின்ற உன்னத பணியினையும் தகவலும் தொழில் நுட்பமும் சேர்த்து செய்கிறது. மீட்சியே இல்லை எனக் கருதப்பட்ட புற்றுநோய்க்கு கூட நிவாரணம் பெறக்கூடிய அளவுக்கு தகவல் தொழில்நுட்பம் உச்சமாக வளர்ந்திருக்கிறது. நோய்களின் ஆரம்பத்திலேயே அதனை கட்டுப்படுத்துகின்ற வல்லமையை தொழில்நுட்பம் பெற்றிருக்கிறது என்றால் மிகையாகாது.

தகவல், தொழில்நுட்பம் என்பவை ஒன்று இரண்டு துறைகளில் அல்ல மனிதவாழ்வுக்கும், அழிவுக்கும் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமான எல்லா துறைகளுக்குள்ளும் தன்னை முதன்மையாக துருத்திக் கொண்டு நிற்கிறது. கல்வி, போக்குவரத்து, வங்கியியல், பாதுகாப்பு என அத்தனை துறைகளிலும் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு மிகப் பரந்த அளவில் செல்வாக்கு செலுத்திய படியே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் இல்லை ஒரு நாள் தொழில்நுட்ப சாதனங்கள் அனைத்தும் செயலிழந்து விடும் எனக் கற்பனை செய்து கொண்டால் அந்த நாள் தான் உலக அழிவின் தொடக்கமும் முடிவுமாக இருக்கும். அத்துணை தூரம் தொழில்நுட்பம் வளர்ச்சியும் தொழில்நுட்ப சாதனங்களின் வருகையும் மோகமும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

ஆதிக்கப் போட்டி நிலவும் நாடுகளும் ஆயுதங்களையும் அணுக்களையும் உற்பத்தி செய்து கொண்டே இருக்கின்றன. இனி ஒரு உலகப் போர் நிகழுமெனின் அது தகவற் தொழில் நுட்பப் போராகவே அமையும். எந்த ஒரு நாடு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ற வகையில் தன்னை தகவமைத்து தக்க வைத்துக் கொள்கிறதோ அந்த நாட்டினால் தான் இந்த உலகினை ஆள முடியும் என்கின்ற யதார்த்தமும் இதன் பின்னால் ஒளிந்திருக்கிறது.

எனவே இந்த தகவல் தொழில்நுட்பப் பின்னணியில் தகவல் தொழில் நுட்பத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு எண்ணற்ற தீமைகளும் அடங்கிக் இருக்கின்றன. எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு மனித, ஏனைய ஜீவராசிகளை வாழ வைக்க கூடிய ஒரு தகவல் தொழில் நுட்ப யுகம் நோக்கி பயணிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் கல்வி நிறுவனங்களும் பாடசாலைகளும்

ந.பாக்கியநாதன்

இன்று கல்வி பெரும் சவால்களை எதிர்நோக்குகின்றது. ஒரு மாணவன் பெறுகின்ற கல்வியின் தரத்தினையும் வினைத்திறனையும் உச்சநிலைக்கு கொண்டு செல்லவேண்டியுள்ளது. 21ம் நூற்றாண்டில் கற்பவர்கள் மிகவும் சிக்கலான இடைத்தொடர்புடைய மற்றும் வெளிப்படையான உலகின் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கல்வியை வழங்கும் நிறுவனங்கள் தமது கல்விப் பயணத்தை புத்தாக்கங்கள் தழுவிய வகையில் தொடரவேண்டி இருக்கின்றது. கற்பவர்கள் தகவல்களை உருவாக்குவதற்கும் அறிவதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் தேவையான திறன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இடமளிக்கும்.

கற்றல் சூழலை விருத்தி செய்வதற்கும் மட்டுமன்றி வாழ்க்கை நீடித்த கல்விக் கலாச்சாரத்தில் திறனாய்வும், ஆக்கத்திறனும் கொண்ட சிந்தனையாளனாக உருவாகுதல் வேண்டும். அதற்கு வகுப்பறைகள் கற்றல் அனுபவங்களை தூண்டும் ஒன்றாகவும், கற்றல் அனுபவங்களை பெறவும் தொடர்பாடல் மற்றும் தொழில் திறன்களைப் பெறவும் உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கல்வியானது தொழில் மற்றும் வேலைத்திறன்களுக்கு அப்பால் சிறந்த பிரஜைகள் என்றவகையில் மக்கள் செய்யும் நாளாந்த பணிகளுக்கு தேவையான திறன்களையும் வழங்குகின்றது. கல்வி நிறுவனங்கள் இத்தகைய சவால்களுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர்கள் ஒரு தொழில் செய்பவர்களாக மட்டுமன்றி சிக்கலான தொடர்புகளை பேணும், பங்கேற்கும் சமூக உறுப்பினர்களாகவும் செயற்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய சவால்கள் நிறைந்த கல்வியை இன்று மாணவர்களுக்கு பாடசாலைகளில் வழங்கப்படுகின்றது. ஆனால் மாணவர்களிடையே தனியார்கல்வி நிலைய கலாச்சாரம் பெருகிவருகின்றது. இதனால் பாடசாலைகள் தமது நோக்கினை நிறைவேற்றுவதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றன.

பாடசாலைகளில் ஒழுங்கமைந்த கல்வி வழங்கப்படுகின்றது. பாடசாலைகளில் பிள்ளைகள் அறிவு, ஆற்றல், விழுமியங்கள், தொழில் திறன்கள் போன்றவற்றில் தேர்ச்சிமிக்கவர்களாக மாற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக பாடசாலை கலைத்திட்டங்கள் இணைக்கலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

மாணவர்கள் அறிவில் தேர்ச்சி மிக்கவராக ஆக்குவதற்கு பாடக் கலைத்திட்டங்கள் உதவுகின்றன. மாணவர்கள் பல்வேறு பாடங்களை கற்கின்றனர். அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடநூல்கள், ஆய்வுகூடங்கள், கணனி அறைகள், செயற்பாட்டறைகள், சங்கீத, நடன, சித்திர கூடங்கள் உதவுகின்றன. மாணவர் அடைவினை மதிப்பிடுவதற்கு நாளாந்தமதிப்பீடு, தொடர் மதிப்பீடு, பொதுப்பரீட்சை என்பன நடாத்தப்படுகின்றன. இதன் மூலம் எமது பாடசாலைக் கல்வி வெற்றி பெறுகின்றது. எனினும் சில பலவீனங்களும் ஏற்படுகின்றன. கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பிப்பதில் சில இடர்பாடுகள் எதிர்கொள்ளப்படுவதால் அதிருப்தி நிலை ஏற்படுவதை ஏற்றுக் கொள்ளவேண்டி உள்ளது.

பிள்ளைகளின் பல்வேறு திறன்களை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பாடசாலைகளில் இணைக் கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பாடசாலையில் காணப்படும் மன்றங்கள, சேவைக் கழகங்கள், விளையாட்டு, சாரணியம், சதுரங்கம், மொழித்திறன் விருத்தி கழகங்கள், என்பன இந்நோக்குடன் உருவாக்கப்பட்டு, மாணவர்களை அதில் பங்கேற்கவும் பயனடையவும் வழிப்படுத்தப்படுகின்றன. ஆனால் இன்றைய தனியார்கல்வி நிலைய கலாச்சாரம் இவற்றுக்கு முட்டுக்கட்டையாக விளங்குகின்றது.

இன்று தொழில் நிறுவனங்கள் தொழிலுக்கு இளைஞர்களை தெரிவு செய்யும் அணுகுமுறையில் அவர்களிடம் பின்வரும் திறன்கள் மதிப்பிடப்படுகின்றது. சிந்திக்கும் திறன், சமூகத்திறன்கள் அல்லது ஆளிடைத் திறன்கள், சுயதிறன்கள் அல்லது உள்ளார்ந்த திறன்கள், ஆளுமைத் திறன் என்பன மதிப்பிடப்பட்டு அறிவுஆட்சி, மொழிப்புலமை, எண்திறன் என்பன அளவிடப்பட்டு தொழிலுக்கு தெரிவு செய்து கொள்கின்றனர். இம்முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவைவிட திறன் மிக்கவர்களே தெரிவு செய்யப்படுகின்றனர். இதற்குரிய திறன் விருத்திகளை வழங்குவதில் பாடசாலை கலைத்திட்டம், இணைக்கலைத்திட்டம் பெரும் பங்கு வகிக்கின்றன.

தனியார் கல்வி நிலையங்களில் வழங்கப்படும் கல்வியானது அறிவு ரீதியான கல்வியாக மட்டும் அமைகின்றது. தேசிய பொதுப்பரீட்சைகளுக்கு மாணவரை தயார்படுத்துகின்றது. உயர் பெறுபேறுகளை பெறுவதற்குரிய ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றன.

வருடம் ஒன்றுக்கு அரசாங்கம் பாடசாலைக் கல்விக்கு செலவிடும் செலவு ரூபா 100,000 மில்லியனிலும் அதிகமாகச் செலவிடுகின்றது. இச்செலவில் ஆசிரியர் சம்பளம், பாடநூல், சீருடை விளைாட்டு போன்ற பல்வேறு செலவுகளும் உள்ளடங்குகின்றன. அரசு இவளவு செலவு செய்யும் போதும் மாணவரக்ள் ஏன் பாடசாலைகளை விட்டு மேலதிகமாக தனியார் கல்வி நிறுவனங்களை நோக்கிச் செல்கின்றனர் என்ற கேள்வி சமுதாயத்தில் எழத்தான் செய்கின்றது.

தேசிய ரீதியல் அரச பாடசாலைகள் செயற்படுகின்றன, சர்வதேசரீதியில் கல்வி கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. எனினும் தனியார் கல்வி நிலையங்கள் பலம் அடைந்து வருகின்றன. இதனால் பாடசாலைக் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் உருவாகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுள்ள முக்கியமான பிரச்சனை தனியார்கல்வி நிறுவனங்களின் மிகையான கற்றல் நடவடிக்கைகளினால் பாடசாலைகளில் பின்வரும் நடவடிக்கைகளில் தாக்கம் ஏற்படுகின்றன.

* பாடசாலைக்கான மாணவர் வரவு
* பாடசாலையில் பெற்றோரின் தொடர்பு
* பாடசாலைகளின் மேலதிக வகுப்புக்களுக்கு மாணவர்கள சமுகமளித்தல்
* இணைபாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் பங்களிப்பு
* பாடசாலைகளுக்கு நெருக்கடி ஏற்படுத்துதல்
* பாடசாலை ஆசிரியர் மீது அவநம்பிக்கை
* பொதுப்பரீட்சை முடிவுகள் மீது தனியார் கல்வி நிறுவனங்கள் உரிமை கோரல்

பாடசாலைகளில் ஒழுங்கமைக்கப்பட்ட நேர அட்டவணைக்கு அமைய பாடங்கள் இடம்பெறுகின்றன. 40 நிமிடங்கள் ஒரு பாடவேளைக்கு ஒதுக்கப்படுகின்றது. நாள் ஒன்றிற்கு பிள்ளை பாடசாலையில் குறைந்தது ஆறு மணித்தியாலங்கள் கல்வி கற்கின்றது. ஆனால் தனியார் கல்வி நிலையங்களில் இதனைவிட கூடிய மணித்தியாலங்கள் பிள்ளை கல்வி கற்கின்றது. இதனால் பாடசாலை கல்விமுறையில் மாணவரிடையே அதிருப்தியான மனநிலை தோன்றுகின்றது. இதன் காரணமாக பாடசாலைக்கு மாணவர்வருகை ஒழுங்கீனமாக அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் ஒரு பாடத்தை ஒரு ஆசிரியரிடம் பிள்ளைகள் கற்கின்றனர். தனியார் கல்வி நிறுவனங்களில் ஒரு பாடத்தை பல ஆசிரியர்களிடம் கற்கின்றனர். இத்தகைய கவர்ச்சி நிலை காரணமாக தனியார்கல்வி நிலையத்திற்கு நாடிச் செல்வதனால் பாடசாலைக்கு அவர்களின் வருகை குறைவடைகின்றது.

பாடசாலைகள் மாணவர் பெற்றோர் மத்தியில் நலன்புரிநிலையங்களாகவே கருதப்படுகின்றன. சீருடை வழங்கும் நிலையம், பாடநூல்களை வழங்கும் நிலையம், மதியஉணவு வழங்கும் நிலையம், குறைந்த கட்டணத்துடன் கல்வி கற்கும் நிலையம், பொதுப்பரீட்சைகளுக்கு அனுமதி வழங்கும் நிலையம் ஆகத்தான் பாடசாலைகள் நோக்கப்படுகின்றன. இவற்றை பெற்றுக் கொள்வதற்காக இவை வழங்கப்படும் காலங்களில் அனேகமான மாணவர்களின் வருகை இருக்கின்றது.

சில பெற்றோர் தம் பிள்ளைகளுடன் அதிகநேரம் செலவிட விரும்புவதில்லை அல்லது அதிக நேரம் செலவிட முடிவதில்லை. இதனால் பிள்ளைகளுக்கு காசு கொடுத்துவிட்டு தம்மை விடுவித்துக் கொள்கின்றனர். இதன் காரணத்தால் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடனான கலந்துரையாடலை இத்தகைய பெற்றோர் தவிர்க்கின்றனர். தனியார் கல்வி நிலையங்கள் ஆசிரியர் பெற்றோருக்கிடையிலான கலந்துரையாடல்கள் இடம்பெறுவது குறைவாக இருப்பதால் பெற்றோர் தனியார் கல்விநிலையங்களை நாடுகின்றனர்.

பெற்றோர் 100% தனியார் கல்விநிலையங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புகின்றனர். தனியார்கல்வி நிலைய ஆசிரியரில் வைக்கும் நம்பிக்கை ஒருவீதம் தானும் பாடசாலை ஆசிரியர் மீது வைப்பதில்லை. பணத்தினால் எதனையும் வாங்கலாம் என்று பணம் கொடுத்து ரியூசன் ஆசிரியர்களை அணுகுகின்றனர். பிள்ளைகளின் கற்றலில் பெற்றோராகிய தாம் கவனம் செலுத்தவேண்டும் என்ற உணர்வு பெற்றோர் மத்தியில் ஏற்படுவது குறைவு இதனால் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களின் அழைப்பினை உதாசீனம் செய்து வருகின்றனர்.

இன்றைய பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பொதுப்பரீட்சையில் அதிக பெறுபேறை பெறவேண்டும் என்ற ஒரு குறிக்கோளையே கொண்டுள்ளனர். பிள்ளையின் ஏனைய திறன் ஆளுமைவிருத்தி என்பவற்றில் அக்கறை செலுத்துவதில்லை. இதன் காரணமாக பாடசாலையை தரிசிக்க விரும்புவதில்லை.

பிள்ளை சுதந்திரமாக இருந்து தனது இயல்புக்கும் விருப்பத்துக்கும் ஏற்றவாறான கல்வியை பெறுவதற்கு தனியார் கல்வி நிறுவனங்கள் உதவுவதாக நம்புகின்றது. மேலும் அழகான உடைகளை பள்ளிப்பருவத்தில் அணிந்து செல்லக்கூடிய ஒரு இடமாக தனியார் கல்விநிலையத்தை கருதுகின்றது. இதனால் பாடசாலைகளில் இடம்பெறும் மேலதிக வகுப்புக்களுக்கு சமுகம் தருவதை தவிர்த்து அந்நேரத்தில் தனியார்கல்வி நிலையத்திற்கு செல்கின்றனர்.

சில மாணவர்கள் ஒரு காலத்தை பாடத்தை பல ஆசிரியரிடம் கற்க விரும்புகின்றனர். இதற்கு ரியூட்டரிகள் அதிகம் உதவுகின்றன. இதனால் பாடசாலையில் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் மேலதிக வகுப்புக்களை தவிர்த்து தனியார் கல்வி நிலையங்களை பிள்ளை நாடுகின்றது.

பல பாடசாலை மாணவர்கள் வாராந்தம் ஒன்று கூடும் இடமாக தனியார் கல்வி நிலையங்கள் விளங்குகின்றன. சகபாடிகளின் சகவாசத்தை நிறுத்தமுடியாத இளம்பருவத்தினர் பாடசாலைகளின் மேலதிகநேர வகுப்புக்களை தவிர்த்து ரியூட்டரிகளுக்கு செல்வதுடன் பாடசாலை நிர்வாகம் பற்றி சகபாடிகளுடன் கலந்துரையாடி அபிப்பிராய பலத்தை உருவாக்கி பாடசாலைகளுக்கு நெருக்கடிகளையும் கொடுக்கின்றன.

பரீட்சைக்கு தயார்படுத்தலையே இலட்சியமாகக் கொண்ட மாணவர் மத்தியில் இணைபாடவிதானம் என்பது அலட்சியப்படுத்தப்பட்டது ஒன்றாகவே காணப்படுகிறது. இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் தமது பிரதான பாடங்களில் கவனம் குறைவடையும் என்ற எண்ணமும் மாணவர் மத்தியில் காணப்படுகின்றது. பிரதானபாடங்களே தமது வாழ்கைக்கு வழிவகுக்கின்றன என்ற எண்ணமும் மாணவரிடையே காணப்படுகின்றது.

மாணவரிடையே நிலவும் தவறான மனப்பாங்குகள் இணைபாடவிதான செயற்பாட்டில் மாணவரின் அக்கறையைக் குறைக்கின்றது. ரியூட்டறிகளுக்கு செல்லாத மாணவர்களுக்குரியதுதான் இணைபாட விதான செயற்பாடு என்ற எண்ணம் மாணவர்களை இதன்பால் ஈடுபாடு குறையச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியூட்டறிகளில் இணைபாடம் பற்றிய கொச்சைப் படுத்தல்களினாலும் இணைபாடம் என்பது வாழ்க்கைக்க சோறு போடுமா என்ற கேள்வி பிள்ளைகள் மத்தியில் எழுகின்றது. இதன் காரணத்தினாலும் இணைபாடவிதான செயற்பாடுகளில் நாட்டம் குறைகின்றது.

தனியார் கல்வி நிலையத்திற்கு செல்லும் மாணவர்கள் சுதந்திரமாக இருந்து தமது இயல்புக்கும் விருப்புக்கும் ஏற்ப கற்பதற்கு ரியூட்டரிகள் உதவுகின்றன என நம்புகின்றனர். பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் விழுமியம்சார் நடைமுறைகள், கட்டுப்பாடுகள், தண்டனைகள், வெகுமதிகள் மாணவர்களால் ரசிக்கப்படுவதில்லை. இவற்றில் இருந்து விலகி சுதந்திரமாக தமது கட்டிளமைப்பருவ உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் வெளிப்படுத்துவதற்கு ஒரு இடத்தை மாணவர் தேடுகின்றன ரியூட்டறிகள் அதற்கு தாராளமாக இடமளிக்கின்றன. இதனால் மாணவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களை மேற்கொள்கின்றனர். இவற்றினால் பாடசாலை நிர்வாகத்திற்கு மாணவர்கள் பல நெருக்கடிகளை கொடுக்கின்றனர்.

பாடசாலைக் கல்வியானது மாணவனது தேடலுக்கும், சுயகற்றலுக்கும் குழுச்செயற்பாட்டுக்கும் களம் அமைத்துக் கொடுக்கின்றது. இது மாணவனது அறிவு, திறன் மனப்பாங்கு ஆகிய ஆளுமை விருத்தி செய்யப்படுகின்றது. மாணவர்களுக்கு குறிப்புக்கள் வழங்குவதோ, விரிவுரை நடத்துவதோ தவிர்க்கப்படுகின்றது.

ஆனால் தனியார் கல்வி நிலையங்களின் கற்பித்தலானது பொதுப் பரீட்சையை மையமாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரைமுறையில் குறிப்புக்கள் வழங்கப்படுகின்றது. இங்கு மாணவன் பரிசோதனைகள் செய்து முடிவுகளை பெற்றுக்கொள்ளாது அதற்குரிய பெறுபேறுகளை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் நிலையே காணப்படுகின்றது. இங்கு விடய அறிவு மட்டுமே வளர்க்கப்படுகின்றது.

எனினும் மாணவனது உடனடி தேவையான பரீட்சைக்கு தயார்ப்படுத்துதல், தேடுதல் ஆய்வு எதுவும் இன்றி சுலபமாகக் கிடைப்பதால் தனியார் கல்விநிலைய ஆசிரியர் மீது மாணவர்கள் நம்பிக்கை வைக்கின்றனர். ஆனால் பிள்ளைகள் என்ற பச்சை மண்ணை என்றென்றும் பேரும் புகழும் கொண்ட உயிர் சிற்பங்களாக மாற்றும் பாடசாலை ஆசிரியர்கள் மீது அவநம்பிக்கை கொள்கின்றனர்.

பாடசாலைகளில் பரீட்சை பெறுபேறுகளின் சித்தி வீதம் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் அனைவரையும் உள்ளடக்கியே கணிப்பிடப்படுகின்றது.

ஆனால் தனியார் கல்வி நிலையங்களின் சித்திவீதம் உயர் பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை மட்டும் கொண்டதாக விளம்பரப்படுத்தப்படுகின்றது. இதனால் கவர்ச்சியும், உயர் எண்ணமும் மாணவர்கள் பெற்றோர் மத்தியில் தனியார் கல்விநிலையங்கள் மீது எழுகின்றது. உண்மைநிலை பூசி மெழுகப்படுகின்றது.

பாடசாலைகளில் பிள்ளைகள் அறிவு, திறன், மனப்பாங்கை கற்றுக் கொள்கின்றனர். அறிவு வளர்ச்சியிலான அடைவ பரீட்சைகளினால் மதிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அடிப்படையில் கல்விப்போட்டியில் பலர் வெற்றி பெறுகின்றனர். தேசியரீதியில் கல்வியினால் பெறக்கூடிய பலவற்றை அனுபவிக்கின்றனர்.

அரசினாலும் சமுதாயத்தாலும் வழங்கப்படும் வெகுமதிகளை அனுபவிக்கின்றன. கல்வியில் உயர்நிலையை அடைந்தவர்களையே தொழில் பதவிகளும், அந்தஸ்த்தும் நாடிவருகின்றன. இதனால் பரீட்சை அடைவுக்கான போட்டி தீவிரமடைகின்றது. அத்தருணத்தில் போட்டியாளரை பயிற்றுவிக்கும் நிறுவனமாக தனியார் கல்வி நிறுவனங்கள் தோற்றம் பெறுகின்றன. வாழ்க்கையின் 13 வருடங்களை கல்வியில் பிள்ளை செலவிடுகின்றது. பரீட்சையில் வெற்றி பெற்றவன் உயர் தொழிலைப் பெறுகின்றான் தோல்வியடைந்தவனின் நிலை என்ன என்ற கேள்விக்கு பதில் அளிக்க தனியார் கல்வி நிறுவனங்கள் முன்வருவதில்லை.

ஆனால் பாடசாலைக் கல்வி மூலம் பிள்ளை பெற்ற அறிவு, திறன், மனப்பாங்குடனான தேர்ச்சி மையக் கல்வி மூலம் பிள்ளை பரீட்சையில் தோற்பதில்லை. அவனிடம் திறன் விருத்தியடைந்துள்ளது. சமூகத்திற்கு உகந்த மனப்பாங்கு உருவாகியுள்ளது.

எனினும் இதனை உணராத பெற்றோரும், பிள்ளைகளும் தனியார் கல்வி நிலையங்களுக்கு கூடுதலான பணத்தை செலவு செய்கின்றனர். இவர்களது செயலானது "கனியிருக்க காய் கவர்ந்தது" போல அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளில் பயிற்றுமொழியாக ஆங்கிலத்தின் மீள் அறிமுகம்

**இ.தமிழ்மாறன்**

"வரலாறு தானாகத் திரும்பத் திரும்ப வருகின்றது" என்ற கூற்றுக்கு அமைய 1950 கள் தொடக்கம் பாடசாலை நிலையில் ஆங்கிலம் பயிற்றுமொழி என்ற அந்தஸ்தில் இருந்து முற்றாக நீக்கப்பட்டது.

ஆனால் இன்று மீண்டும் அதிகாரபூர்வமாக பாடசாலைகளில் பயிற்றுமொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசாங்கத்தின் கொள்கை வகுப்போர் மட்டுமன்றி, பெற்றோரும் இதற்கு ஆதரவு தெரிவித்து வருகின்ற நிலைமையும் உண்டு. பெற்றோர்கள் விரும்புமிடத்து ஆங்கிலத்தை பயிற்றுமொழியாகக் கொள்ளமுடியும். அதேபோல் தமிழ், சிங்கள பாடசாலைகளும் விரும்பியவிடத்து ஆங்கிலமொழியை பயிற்றுமொழியாகக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான அனுமதியைக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

உலக மயமாக்கத்தின் சர்வதேச உறவுகள், வர்த்தகம், கைத்தொழில், தகவல் தொழில்நுட்பத்தின் விரிவான பயன்பாடும் முக்கியத்துவமும், உலகளாவிய ரீதியில் பன்மடங்காக பெருகிவரும் அறிவுத் தொகுதியனைத்தும் ஆங்கிலத்தில் இருக்கின்றமை, சர்வதேச சந்தையில் இலங்கையர்கள் போட்டியிடுவதற்கு, மருத்துவம், பொறியியல் மற்றும் சமூக அறிவியல் துறைகளில் ஆங்கில மொழி பயன்படுத்துகின்றமை, நாட்டுக்குள் பல்தேசியக் கம்பனிகளின் வருகை, தனியார் துறையின் வேலைவாய்ப்புக்களுக்கு ஆங்கில மொழித் தேவையை நிறைவு செய்ய வேண்டிய அவசியம் போன்ற காரணங்களுக்காக இளையோர் மத்தியில் ஆங்கிலமொழித் தேர்ச்சியை ஏற்படுத்த ஆங்கில வழிக் கல்வியை ஒரு கொள்கைத் தெரிவாக அரசு முன்வைத்தது.

நாட்டிலுள்ள சர்வதேச பாடசாலைகள் ஆங்கிலமொழிக் கல்வியை அறிமுகம் செய்திருந்தன, குறிப்பிட்டளவான இளையோர் ஆங்கிலமொழி பேசும் நாடுகளில் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்நிலையில் அரசாங்கப் பாடசாலைகளில் சுயமொழிகளில் கல்வி பெறுவோர் ஆங்கில மொழியில் கல்வி பயின்ற மாணவர்களுடன் போட்டியிட முடியாத ஒரு பாதகமான நிலை உருவாகியிருந்தமையை அரசாங்கம் கருத்திற் கொண்டு அரச பாடசாலைகளில் பயிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு ஆங்கிலமொழியில் கல்வி வழங்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்தது. இன்று ஆங்கிலமொழியின் முக்கியத்துவமும், அவசியமும் பற்றி மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

எனினும் கடந்த காலங்களில் ஆங்கில பாடத்தை கற்பிக்கும் முயற்சிகளில் காட்டப்பட்ட அலட்சியமும், அக்கறை இன்மையும் ஆங்கில மொழியறிவில் பாரதூரமான வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையிலேயே ஆங்கில மொழிக் கல்வி ஒரு தெரிவாக பரிந்துரைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதனால் நகர்புறப் பாடசாலைகள் மட்டுமன்றி கிராமப்புறப் பாடசாலைகளில் கூட பல சிரமத்தின் மத்தியில் ஆங்கிலமொழிக் கல்வியை அறிமுகம் செய்து வருகின்றனர்.

வெளியுலகை தரிசிப்பதற்கான பிரதான சாரளம் ஆங்கிலமொழியே என்ற அறிஞர்களின் கருத்துக்கு அமைய ஆங்கிலமொழிக் கல்வி மூலம் மாணவர்கள் உயர்ந்த தேர்ச்சிகளைப் பெறுவர்.

எது வித ஆய்வுகளும் இன்றி 2000ம் ஆண்டு கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய சில பாடசாலைகளில் இம் மொழிமாற்றம் நிகழ்ந்தது. 2003 ம் ஆண்டு ஆணைக்குழுவின் அறிக்கையில் இந்தப் புதிய கொள்கை தவிர்க்கமுடியாத வகையில் நகர்ப்புறங்களில் உள்ள பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளுக்கு சாதகமாக அமைந்தது என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

குடியேற்ற ஆட்சிக்காலத்தில் இருந்தது போன்று சலுகை பெற்ற வகுப்பினர் மேலும் வலுப்பெற நேரிடும் என்றும் நாட்டில் ஏற்கனவே இருந்த சமூகப் பொருளாதார வேறுபடுத்தல்கள் மேலும் தீவிரம் அடையும் என்று விமர்சிக்கப்பட்டது.

எனவே பயிற்றுமொழிக் கொள்கையை மாற்றும் போது ஆங்கில அறிவைப் பெற்றுக்கொள்வதில் நியாயத்தன்மை இருக்க வேண்டும் என அவ் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது.

சில பாடசாலைகளில் முதலாம் தரத்திலும் பயிற்றுமொழியாக ஆங்கிலம் அறிமுகம் செய்யப்பட்டது. இதனை கருத்தில் கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழு அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்ப கல்விநிலையில் சிங்களம் அல்லது தமிழ் பயிற்று மொழியாக இருத்தல் வேண்டும். ஆங்கிலம் வாய்மொழி நிலையில் இருத்தல் வேண்டும்.

மூன்றாம் தரத்திலிருந்தே முறையாகக் கற்பிக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்தது. இன்று சகல பாடசாலைகளிலும் தரம் 01 இருந்து தரம் 05 வரை வாய்மொழி ஆங்கிலம் சுற்றாடல்சார் செயற்பாடுகள், கணிதம் ஆகிய பாடங்களுடன் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிக்கப்படுகின்றது. முறையான ஆங்கிலம் தரம் 03 இல் இருந்து தரம் 13 வரை கற்பிக்கப்படுகின்றது.

இடைநிலைக்கல்வியில் கணிதம் விஞ்ஞானம், தொழில்நுட்பப் பாடம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் ஆங்கில மொழியில் கற்ப்பிக்கப்படுகின்றது. ஏனைய பாடங்கள் சுயமொழியில் கற்ப்பிக்கப்படுகின்றது.

இதனால் இரு மொழிக்கல்வி மேம்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. எனினும் தேசிய ஆணைக்குழு பயிற்றுமொழி பற்றிய திட்டவட்டமான ஒரு பரிந்துரையைச் செய்யாது ஆங்கிலத்தை பயிற்றுமொழியகா ஏற்கும் பாங்கு காணப்படுகின்றது.

இப்பரிந்துரையானது பயிற்றுமொழி தொடர்பாக விவாதிக்கும் பல்வேறு தரத்தினரை திருப்திப்படுத்தும் நிலையிலேயே அமைந்துள்ளது. இன்றைய உலக மயமாக்கப்பட்ட சூழலில் ஆங்கில அறிவு அவசியமானது.

இதனால் இன்று ஆங்கிலமொழியை பயிற்றுமொழியாக கொள்ள வேண்டும் என்று கூறுபவர்கள் அதனூடாக மாணவர்கள் சிறந்த ஆங்கிலமொழி தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வர் என்று கூறுகின்றனர். இன்று நடைமுறையிலுள்ள ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்பிக்கும் கொள்கை தோல்வியடைந்து விட்டது.

இதனை கொழும்பு பல்கலைக்கழக தேசிய கல்வி ஆராட்சி மதிப்பீட்டு நிலையம் ஆய்வு ஒன்றில் நான்காம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர மாணவர்களில் பத்து சதவீதத்தினரே ஆங்கிலமொழி தேர்ச்சி மட்டத்தை பெற்றுள்ளனர் என்பது பறைசாற்றி நிற்கின்றது.

எனவே இந்நிலையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாக கற்பித்து அதனூடாக அம்மொழியில் தேர்ச்சியை ஏற்படுத்தி விடமுடியாது. அதற்கு ஆங்கிலத்தை பயிற்றுமொழியாக்க வேண்டிய தேவை உள்ளது.

ஆங்கிலமொழியை பயிற்றுமொழியாக்கி விட்டால் ஆங்கிலமொழி தேர்ச்சி தொடர்பாக நிலவும் மனிதவள பற்றாக்குறையை நீக்கிக் கொள்ளலாம். வெளிநாடுகளில் உயர்கல்வி பெறவும், வேலைவாய்ப்பைப் பெறவும், ஆங்கிலக் கல்வி அவசியமானது.

எனவே பாடசாலையில் ஆங்கிலமொழியை பயிற்றுமொழியாக்குவது சிறந்தது. அத்துடன் இன்று இணையத்தளப் பாவனை, குறுந்தட்டுக்கள், நூல்கள், சஞ்சிகைகள் என்பன ஆங்கிலமொழியில் இருப்பதால் ஆங்கிலமொழித் தேர்ச்சி அவசியம். எனவே பயிற்றுமொழியாக ஆங்கிலம் வந்துவிட்டால் கல்வித் தராதரத்தை உயர்த்திக் கொள்ளலாம். 1960 முன் பல்கலைக்கழக கல்வி ஆங்கிலமொழி பயிற்றுமொழியாக இருந்ததால் அதன் தராதரம் உயர்ந்து காணப்பட்டது. அதற்கு பின்வந்த சுயபாஷைக் கொள்கையினால் தரம் குறைவடைந்து விட்டது என்று வாதிப்பவர்களும் உள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் ஆங்கிலேயர் காலத்தில் பாடசாலை சென்ற மாணவர்களில் பத்து சதவீதமான மாணவர்களே ஆங்கிலமொழியில் கல்வி கற்றனர். அவர்கள் சகலரும் ஆங்கிலமொழியில் பாண்டித்தியம் பெற்றுவிடவில்லை. ஆங்கிலவழிக் கல்வியினால் அக்காலத்தில் அதிகம் பயனடைந்தவர்கள் வீட்டுமொழியாக ஆங்கிலத்தைக் கொண்டவர்களே.

அக்கால ஆங்கிலக் கல்வி வெறுமனவே ஆங்கிலமொழி தேர்ச்சியை வழங்குவதை நோக்காக் கொண்டவையே தவிர கல்வியின் தரத்தை உயர்த்துவனவாக அமையவில்லை.

இது அக்காலத்தின் காலனித்துவ நாடுகளின் தேவையாக இருந்தது. ஆனால் இன்று சமூக மாற்றங்கள், சமூகப் பிரச்சனைகள், இளைஞர்களிடம் காணப்படும் விரக்தி, கிளர்ச்சிப் போக்கு, நாட்டில் காணப்படும் இனமுரண்பாடு, நாட்டின் வளங்கள் விரயமாக்கப்படுதல், உலகமயமாக்கல் அதனால் ஏற்படும் தாக்கங்கள் பெருகி வரும் வன்செயல்கள், உயர்நத வாழ்க்கையில் விழுமியங்களின் முக்கியத்துவம், அறிவின் பெருக்கம், கற்றல் தேர்ச்சிக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் இவை காரணமாக இன்றைய கல்விமுறைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் பயிற்றுமொழியாக மீண்டும் ஆங்கிலம் வருதல் பொருத்தமானது.

ஆங்கிலமொழியிலான கற்றலிலும் இலகுவாக சுற்றாடல், பாதுகாப்பு, கணிதம், தொடர்பான தத்துவங்களை சுயமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் குறுகிய காலத்தில் பெற்றுவிட முடியும். எனவே ஆங்கில மொழித் தேர்ச்சிக்கு அப்பால் பல அடிப்படையான கல்விசார் நோக்கங்கள் உண்டு. எனவே அவற்றையும் கவனத்திற் கொண்டு ஆங்கில மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

ஆங்கிலமொழியிலான தேர்ச்சியானது பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களில் தேர்ச்சியை அதிகரிக்கும் வகையில் ஏதேனும் புதிய பங்களிப்பை செய்யமுடியுமா என்ற வினா எழும்புகின்றது. நாம் பிறந்தது முதல் பேசிக் கற்று பழக்கப்பட்டுவந்த மாணவர்கள் சுயமொழியில் கணிதம் விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் தேர்ச்சி குறைந்த நிலையிலேயே இருக்கின்றனர் என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன.

இந்நிலையில் ஆங்கிலத்தை பயிற்றுமொழியாகக் கொண்டு எமது கல்வித் தரத்தை எவ்வாறு மேம்பாடடையச் செய்யமுடியும். எனவே ஆங்கிலத்தை பயிற்றுமொழியாக அறிமுகம் செய்யப்படும் இடத்து எமது கல்வித் தரம் வீழ்ச்சியடைய சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு.

அத்துடன் பிள்ளை வீட்டிலும் சூழலிலும் சுயமொழியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு பயிற்றுமொழியாக ஆங்கிலமொழியைக் கொள்ளும் இடத்து ஆங்கிலமொழி அந்நியமொழியாகவே விளங்கும். இவ்வாறு அந்நியமொழியில் கல்வி கற்க முயன்று தமது இயற்கை வளர்ச்சிக்கு தடைகளை ஏற்படுத்தி கொண்டவர்கள் பலர் என கல்வியலாளர்கள் கூறுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் கருத்துப்படி பயிற்றுமொழியாக சுயமொழியே இருப்பது நன்று.

ஆங்கிலம் போன்ற உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த அந்நியமொழியைக் கற்றவர்களின் கருத்து தாய்மொழியை முறையாகக் கற்றவர்கள்தான் அந்நியமொழியை முறையாகக் கற்றுக் கொள்ள முடியும்.

ஒரு உலகளாவிய மொழியானது சர்வதேச தொடர்பாடலில் ஏகபோக உரிமையை பெற்று மொழி மற்றும் கலாசார பன்மைத்துவம் ஆகியவற்றை மேலோங்கச் செய்யும். ஆனால் சுயமொழி கற்பதற்கான ஊக்கம் குறைவடையும்.

பலமொழிகளைப் பேசும் ஆற்றல் மிக்கவர்கள் கூடியளவு மனிதத்தன்மையை பெறுகின்றனர் என்ற பழமொழிக்கு இணங்க ஆங்கிலத்தை பயிற்றுமொழியாக மீளஅறிமுகம் செய்தல் சிறப்பானதொன்றாகும்.

ஆங்கிலத்தை பயிற்றுமொழியாக் கொண்டு பயில்வோருக்கு பொதுத்துறை, சிறப்பத்துறை சார்ந்த ஏராளமான நூல்களும், சஞ்சிகைகளும் இருக்கின்றன. இவற்றைவிட இணையத்தளத்தில் காணப்படும் அனைத்தும் ஆங்கிலமொழியிலேயே உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த பாடநூல்களைத் தெரிவு செய்யும் வாய்ப்பும் பயிற்றுமொழியை ஆங்கிலமாகக் கொண்ட சந்தர்ப்பங்களில் அதிகம் உண்டு.

எனவே பயிற்றுமொழியாக ஆங்கிலம் மீள் அறிமுகம் செய்வதால் மாணவர்களை சமூகப் பொருளாதார ரீதியில் ஒரு சிறப்பான நிலைக்கு உயர்த்த முடியும்.

எனினும் தமது வாழ்க்கை அனுபவத்துடன் தாம் பெற்ற கல்வியை தொடர்புபடுத்திக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இன்று பாடசாலைப் பிள்ளைகள் ஓர் ஆண்டில் 90 சதவீதமான நேரத்தை பாடசாலைக்கு வெளியே உள்ள உலகில் அதாவது ஆங்கிலம் பேசாத உலகில் கழிக்கின்றனர்.

இதனால் பிள்ளைகள் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியும்.

மீண்டும் ஆங்கிலமொழி பயிற்றுமொழியாகக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் ஆங்கில வழிக் கல்வி பெற்றோர், சுயமொழி கல்வி கற்றோர் என்ற வர்க்க பேதம் உருவாகும்.

கிராமப்புறங்கள் மென்மேலும் நகர்ப்புறங்களைவிட பின்தங்க நேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலமொழித் தேர்ச்சி மட்டுமே மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கான அளவுகோளாக்கப்படும். அறிவும், திறனும், ஆர்வமும் கொண்ட சுயமொழிவழிக் கல்வி பெற்ற மாணவர்கள் பின்தள்ளப்படுவர். இன்று "தரமான சமூகத்துக்கு தரமான கல்வி" என்ற சிந்தனை மேலோங்கி இருக்கின்றது.

இந்தச்சிந்தனையை முடிந்தளவில் எட்டவேண்டுமாயின் அது தாய்மொழிக் கல்வியின் ஊடாகவே சாத்தியமாகும். ஏனெனில் கல்வி என்பது ஒரு பிள்ளை உயர் தொழில் வாய்ப்பு பெறல், உயர் தொழில்நுட்பங்களை அறிதல் என்பவற்றை மட்டும் உள்ளடக்கிய ஒன்றல்ல. உண்மையான கல்வி என்பது ஒரு பிள்ளை பொருத்தமான அறிவு, திறன், மனப்பாங்கு சார் தேர்ச்சிகளை பெற்றுக்கொள்ளுதலாகும்.

அதற்கு கல்வி மொழியானது இயல்பானதாக, நெருடல் அற்றதாக பிள்ளைக்கு இருத்தல் வேண்டும். கல்வி தரமானதாக அமைவதற்கு சிந்தனை தூண்டல், சிந்தனை வெளிப்பாடு என்பன அவசியம். பிள்ளைகள் தாய்மொழியிலேயே சிந்திக்கின்றனர். பயிற்றுமொழியாக ஆங்கிலம் இருக்கும் இடத்து சிந்தனைத் தூண்டலுக்கும், சிந்தனைவெளிப்பாட்டுக்கும் இடையே ஒரு முரண்பாடு ஏற்படுகின்றது. அதற்காக ஆங்கிலத்தை புறந்தள்ளிவிட முடியாது. அதனை இரண்டாம்மொழியாக்குவதன் ஊடாக தாய்மொழியினூடாகப் பெற்ற கல்வி மேலும் அர்த்தமுடையதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறிவாலயம், "ஆனந்தகானம்", இமையாணன் உடுப்பிட்டி

**செ.நல்லையா (நடேசன்)**

அப்பா
மூன்றெழுத்து
மந்திரச்சொல்

தட்டுத்தடுமாறி
நடை நடந்து
தடுக்கி விழ முன்னர்
கை பிடித்து
கூட நடந்து
நடை பழக்கி
வழிகாட்டிய
ஊன்றுகோல்;
வெண்பிரம்பு;

புழுதியுடன் வியர்வை வடிய
உப்பு மேனியை நாவினால் நக்கி
சுவைத்த பொழுதெல்லாம்
அருகிருந்து நிழல் தந்த குடை;

முதுகு மீதேற்றி.....
உப்பு மூடை சுமந்து.......
சுகமான பாரமாய்
சுமந்த பாரந்தாங்கி

இப்பொழுது
பெரும் பாரமாய்.......
வலிகளடர்ந்த விழியோடு.....
கையசைத்து போன காற்றின்........
திசைகளற்ற வெளி நோக்கி
தனித்தலைகிறது மனசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org